# ஜாமக்காரன்

WATCHMAN


காவல்காரன்

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com





**கர்த்தருக்குள் அன்பானவர்களே!**

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.**

**கடந்த இரண்டு மாத ஜாமக்காரன் மிக தாமதமாக உங்களுக்கு அனுப்பியதின் காரணத்தை ஏப்ரல் 2014 ஜாமக்காரனில் வாசித்திருப்பீர்கள். இனி அப்படி தாமதம் உண்டாகாது என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். இரண்டுமாத தாமத்தில் என் ஜாமக்காரன் குடும்பத்தில் என் வாசகர்களில் பலர் என்னை என்னமாய் நேசிக்கிறீர்கள் என்பதையும், எவ்வளவாய் வசனத்துக்காக வாஞ்சையாய் காத்திருக்கிறீர்கள் என்பதையும் உணர்ந்து தேவனைத்துதித்தேன்.**

**‘ புதிய விலாச பட்டியல் தயாரித்து முடித்துவிட்டோம். இந்த புதிய விலாச பட்டியலில் உள்ளவர்களுக்குமட்டும் இனி ஜாமக்காரன் அனுப்பி வைக்கப்படும். புதிய விலாச பட்டியலிலேயே ஒரு நபருக்கு இரண்டு பத்திரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதை அறிந்தோம். பலர் அதை எனக்கு உடனுக்குடன் அறிவித்து ஒத்துழைப்பு நல்கினார்கள். அவர்களுக்கு நன்றி.**

**‘ ஜாமக்காரன் புதிதாக தேவைப்படுபவர்கள் எங்களுக்கு உங்கள் முழு விலாசத்தையும் பின்கோடு,தொலைபேசி எண்ணையும் கடிதம்மூலம் அல்லது இ-மெயில் மூலம் ஜாமக்காரன் வேண்டும் என்று எழுதிக்கேட்டுக்கொண்டால் உங்கள் விலாசத்தை நேரிடையாக புது விலாசபட்டியலில் சேர்த்துக்கொள்வோம்.**

## கர்த்தரை துதிக்கிறேன்:

**‘ நம் ஜாமக்காரன் வாசகர்களின் பிள்ளைகள் அனைவரும் 10,11,12வது ஆகிய பரீட்சைகளில் நல்ல மார்க்குடன் தேர்வாகியிருப்பது மிகவும் சந்தோஷப்படகூடிய விஷயமாகும். மாணவர்களின் பரீட்சைக்காக பல ஊழியர்கள் ஆங்காங்கு நடத்திய ஜெபக்கூட்டங்களில் நம் ஜாமக்காரன் வாசகர்களின் பிள்ளைகள் பலர் பங்குபெறாதவர்கள் ஆகும்.**

# ஜூன் 2014

இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்தும் பல ஊழியர்கள் மறைமுகமாகவும்,நேரிடையாகவும் ஏராளமான காணிக்கைகளை மாணவ,மாணவிகளிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். இந்த குறிப்பிட்ட ஊழியர்கள் நடத்தும் ஊழிய வியாபாரத்தில் இவர்கள் படிக்கும் பிள்ளைகளையும் விட்டுவைக்கவில்லை. ஆனால் ஜாமக்காரன் வாசகர்களின் நம் பிள்ளைகள் இந்த ஊழியர்கள் நடத்திய கூட்டங்களில் பங்கொடுக்காமல் இவர்கள் அனைவரும் தாங்களே சொந்தமாக ஜெபித்தும்,தன் பெற்றோருடன் இணைந்து ஜெபித்தும், கஷ்டப்பட்டு இரவும்,பகலும் படித்து தங்கள் சொந்த முயற்சியினாலும்,தேவகிருபையினாலும் நம் பிள்ளைகள் பாஸ ஆகியுள்ளனர். சில வீடுகளில் பரீட்சை முடியும்வரை குடும்பமாய் டிவி பார்ப்பதை நிறுத்தியும் இவர்கள் பெற்றவர்கள் தாங்களும் டிவி பார்க்காமல், தங்கள் பிள்ளைகள் பரீட்சைக்கு படிக்க பெரிதும் உதவியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெற்றோரை வாழ்த்துகிறேன். நம் வாசகர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் பிள்ளைகளை பரீட்சையில் பாஸாக ஜெபத்துக்கு காணிக்கை வாங்கும் ஊழியர்களிடம் போகவில்லை என்பதை அறிந்து தேவனை துதிக்கிறேன்.

‘ பிள்ளைகளை நல்லபள்ளிகளில்,கல்லூரிகளில் சேர்க்க விசேஷமாக ஜெபம் ஏறெடுக்கின்றோம். மேலும் வாலிப பிள்ளைகள் **உயர்கல்வி** படிக்கும்போது அல்லது கல்லூரிகளில் சேர்ந்தவுடன் அங்கு **ஆவிக்குரியநண்பர்களை** ஜெபத்தோடுதேடுங்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு காரணமில்லாமல் **பாக்கெட்மணி** அல்லது கைசெலவுக்கு பணம் என்ற பெயரில் பணம் கொடுத்து கெடுகாத்தீர்கள். அவர்களிடம் செய்த செலவிற்கு கணக்குகேட்காமல் பிள்ளைகளுக்கு அதிக பணம்கொடுத்து பிள்ளைகள் கெட்டுப்போக பெற்றோராகிய நீங்களே காரணமாகிபோய் கடைசியில் நீங்கள் கண்ணீர்விடும் நிலைக்கு ஆளாகாதிருங்கள் என்று எச்சரிக்கிறேன். ‘ உங்கள் வாலிப பையன்களுக்கு தேவையில்லாமல்**மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுத்து அவர்களின் மரணத்துக்கும், விபத்துக்கும் நீங்கள் காரணராகி கண்ணீர்விடும் நிலை** வேண்டாம். பிள்ளைகளுக்கு வாகனம் மிகஅவசியம் என்றால் அதிக வேகத்தில் ஓடும் விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுத்து பிள்ளைகளை கெடுக்காதீர்கள். நீங்கள் பணக்காரராக இருந்தாலும், பிள்ளைகளின்மேல் பாசம்,அன்பு உள்ளவர்களாக இருந்தாலும் அந்த **பாசத்தையும், அன்பையும்** மனதில் அடக்கிவைத்துக்கொள்ளுங்கள்.‘ பெற்றோர்கள் அடிக்கடி பிள்ளைகளின் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரிக்கு சென்று பிள்ளைகளின் படிப்பு,பழக்க வழக்கங்கள், பிள்ளைகள் யாரோடு எப்படிப்பட்டவர்களோடு நெருங்கி பழகுகிறார்கள் என்பதையெல்லாம் விசாரியுங்கள். அவர்களின் நண்பர்கள் கெட்ட நண்பர்களா என்பதையும் விசாரித்து அறியுங்கள். குறைந்தது மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது உங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் அவர்களின் வகுப்பு ஆசிரியர் அல்லது கல்லூரியானால் அவர்களின் HOD அல்லது லெக்சரரையாவது சந்தித்து விசாரித்து வருவது நல்லது, நீங்கள் அடிக்கடி பள்ளிக்கு,கல்லூரிக்கு வந்துப்போவது பிள்ளைகளைப்பற்றி விசாரிப்பது பிள்ளைகள் அறிவது நல்லது.அது அவர்களுக்கு பயத்தையும்,பாதுகாப்பையும் உண்டாக்கும். ஜெபத்தோடும்,ஞானத்தோடும்,பிள்ளைகளுக்கு தன் நண்பர்கள் மத்தியில் அவமானம் உண்டாகாத முறையில் இந்த விஷயத்தில் உங்கள் அனுகுமுறை அமையவேண்டும். உங்கள் குடும்பத்துக்காக, குறிப்பாக உங்கள் குடும்பத்தில் படிக்கும் பிள்ளைகளுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

‘ வேதவசனம் கூறுகிறது. **பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான்.நீதி 13:24.**

‘ **பிள்ளையானவன் நடந்தவேண்டிய வழியிலே அவனை நடத்து:அவன் முதிர்வயதிலும் அதைவிடாதிருப்பான்.நீதி 22:6.**

‘ நீங்கள் அனுப்பிய e-mo மற்றும் மணியாடர்,பேங்க்மூலம் அனுப்பிய காணிக்கைகளையும் பெற்றுக்கொண்டேன். அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். உங்களில் பலர் உடனுக்குடன் தாங்கள் எனக்கு அனுப்பிய தொகையை எனக்கு அறிவித்தனர். உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகிறேன். கர்த்தருடைய சமாதானம் உங்களோடு இருப்பதாக. ஆமென். **கர்த்தரின் உன்னத பணியில்:**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

# பிலிப்பு
# என்கிற சுவிசேஷகன்

(Dr.K.Muralidhar,MD.,Tribal Mission)



**குறிப்பு:** இந்த பிரசங்கத்தை செய்தவர். **டாக்டர்.முரளிதர்,** எம்டி, டிரைபல்மிஷன் பொதுசெயலரும், **ஆனைக்கட்டியில்** உள்ள எங்கள் டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியின் தலைமை பொறுப்பில் உள்ள ஆஸ்பத்திரியில் எம்டி படித்த **இருதய வியாதி** நிபுணர் ஆகும். உலக பிரசித்தி பெற்ற கன்வென்ஷன் பிரசங்கியுமாவர். இவர் பொறுப்பில் டிரைபல் மிஷன் கையளிக்கப்பட்டபின் மிக பெரிய அளவில் மிகச் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது. **பாண்டிசேரி ஜிப்மர் மெடிக்கல் காலேஜில் எம்டி படிப்பும், இருதய** சிறப்பு படிப்பும் படித்து கேரளாவில் மிகவும் பிரபலமானவர் ஆகும். அவருக்காகவும் , அவர் கையில் ஒப்படைக்கப்பட்ட மிக உன்னத பொறுப்புக்காகவும் ஜாமக்காரன் வாசகர்கள் ஜெபியுங்கள்.

வேதாகமத்தில் **சுவிசேஷகன்** (Evangelist)என்று குறிப்பிடப்பட்ட ஒரே நபர் **பிலிப்பு.** அப்போஸ்தலனாகிய பவுலும் அவரை சேர்ந்தவர்களும் **செசரியா** பட்டணத்திலே **பிலிப்பு** என்னும் **சுவிசேஷகனுடைய** வீட்டில் தங்கினதாக அப் 21:8ம் வசனத்தில் வாசிக்கின்றோம். **சுவிசேஷகன்** என்று அழைக்கப்பட்ட இந்த **பிலிப்பு** என்பவர் யார்? இவரது தகுதி அல்லது குணாதியசங்கள் என்ன? என்பதை சற்று ஆராய்வோம்.

அப் 6:5ம் வசனத்தில் முதன் முறையாக இவரைக்குறித்து நாம் வாசிக்கின்றோம். ஆதி திருச்சபையில் கிரேக்க விசுவாசிகளிடையே முறுமுறுப்பு ஏற்பட்டபொழுது அதை சரிப்படுத்த தெரிந்துக்கொள்ளப்பட்ட ஏழு பேரில் **பிலிப்பும்** ஒருவர். இவர்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு, **பந்தி விசாரணை** செய்யும் ஒரு எளிய வேலையாகும்.(அப் 6:2). இந்த எளிய வேலையைச் செய்ய நியமிக்கப்பட்ட ஏழு நபர்களுக்கும் இருந்த தகுதியைப்பற்றி வேதம் கூறுவது என்னவென்றால் **"பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிறவர்கள்"** என்பதே (அப் 6:3).

' ஒரு சாதாரண பந்தி விசாரிக்கும் வேலைக்கு ஆதி திருச்சபையில் அன்று சபையில் உள்ள அனைவரையும் கூட்டி வறுத்தி அவர்களில் எல்லாராலும் **நல்ல சாட்சி** பெற்றவர்களை தெரிந்தெடுத்து சபை ஊழியத்தில் அந்த **சாதராண பணிக்கு** தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அதில் ஒருவன்தான் **பிலிப்பு** என்று குறிப்பிட்டுள்ளார்.

' (ஆனால் நம் சபையில் ஆயர்களை,பிஷப்மார்களை சபை நிர்வாக கமிட்டி மூப்பர்களை தெரிந்தெடுக்கும்போது எல்லாராலும் **நற்சாட்சி பெற்றவர்களா** என்று அவர்களை ஆராய்ந்து பார்க்காமல் குடிக்காரர்களை அல்லது பணக்காரர்களின் அதாவது அரசியல்வாதிகளின் சிபாரிசு பெற்றவர்களை தெரிந்தெடுக்கிறார்கள். சினாட்டில் உள்ளவர்களுக்கு பல கோடிகளை லஞ்சமாக கொடுத்து பிஷப் பதவியையே விலைக்கு வாங்கிவிடுவதால் தகுதியில்லாதவர்கள் சபை பொறுப்பில் அமர்கிறார்கள். இப்படிப்பட்டவர்களால் சபை பிரச்சனகளை சரிப்படுத்த முடிவதில்லை. சபையில் **பிரச்சனைகள்** வரும்போது **நியாயம் கிடைக்க** விசுவாசிகள் **நீதிமன்றம்** தேடிப் போகிறார்கள். நம் சிஎஸ்ஐ,லூத்தரன் சபைகளில் உள்ள ஊழியர்கள், நிர்வாகதுறையில் உள்ளவர்கள் இவர்களில் பெரும்பாலானவர்கள் **குடிக்கு** அடிமையானவர்கள் என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது இப்படிபட்ட வர்களைக்குறித்து நாம் கேள்விப்படும்போது நம் சபை - டையோசிஸ் சீர்ழிய முக்கிய காரணம் ஆயர்களும் டையோசிஸ் தலைமையில்உள்ளவர்களும் **தகுதியற்றவர்களாக** தெரிந்தெடுக்கப் பட்டார்கள் என்றால் அது மிகையாகாது- ஜாமக்காரன்).

' இன்றைய கிறிஸ்தவ சபைகளிலும்,ஸ்தாபனத்திலும் **"பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சிப் பெற்றவர்கள் தேவை"** என்று ஒரு விளம்பரம் கொடுக்கப்பட்டால் அது ஒரு உயர்ந்த பதவிக்காகவோ அல்லது மேலான பொறுப்புக்காகவோ இருக்கும். இப்படிப்பட்ட உயர்ந்த தகுதிகளைப் சாதாராண சீஷனாகிய பிலிப்பு பெற்றிருந்தான். ஆனால் ஒரு **தாழ்மையான வேலையை** ஏற்றுக்கொள்ள பிலிப்பு தயங்கவில்லை. அதுமட்டுமல்ல, பிலிப்பும் மற்ற ஆறு பேரும் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் **"தேவவசனம் அந்த ஊரில் விருத்தியடைந்தது, சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று: ஆசாரியர்களில் அநேகரும் இயேசுவை விசுவாசித்து கீழ்ப்படிந்தார்கள்"** என்று அப் 6:7ல் கூறப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். பந்தி விசாரிப்பு என்ற இந்த எளிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட 7 நபர்களும் சுவிசேஷம் அறிவிக்கும் ஊழித்திலிலும் எவ்வளவு சிறப்பாக செயல்பட்டார்கள் என்பதை இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது.

' அடுத்தப்படியாக **பிலிப்புவை** நாம் அப் 8ம் அதிகாரத்தில் காண்கிறோம். அக்காலத்தில் எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அதனால் யாவரும் யூதேயா,சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுபோனார்கள். இந்த சூழ்நிலையில் பிலிப்பு சமாரியாவுக்கு சென்று இயேசு கிறிஸ்துவைக்குறித்து பிரசங்கித்தார்.(அப் 8:5). **இயேசுகிறிஸ்து பரமேறு முன் சீஷர்களுக்கு** கொடுத்த கட்டளை **"பரிசுத்தஆவி உங்களிடத்தில்வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும்,யூதேயா முழுவதில் சமாரியாவிலும் பூமியின் கடைசிப்பரியந்தம் எனக்கு சாட்சி களாயிருப்பீர்கள்"** என்பதே.அப் 1:8. இதனை நினைவிற்கொண்டே பிலிப்பு **சமாரியாவிற்கு** சென்றிருக்கக்கூடும். **சமாரியாவில்** இவரது ஊழியம் வெகு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இவ்விதமாக சமாரிய ஊழியத்தின் **உச்சக்கட்டத்தில்** பிலிப்பு அந்த ஊழியத்தைவிட்டு **வனாந்திரத்திற்கு** போகும்படி **கர்த்தருடைய** தூதனிடமிருந்து கட்டளை பெற்றார். இச்சூழ்நிலையில் வேறு எவராகயிருந்தாலும் இப்படியொரு மகிமையான ஊழியத்தை விட்டுச்செல்ல அவர்களுக்கு மனமிருந்திருக்காது. ஆனால் **பிலிப்பு** எந்தவொரு மறுப்பும் சொல்லமாலும் எதற்காக அங்குச் செல்ல வேண்டும் என்றும் கேட்காமல் கர்த்தருடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்து **ஒரே ஒரு மனிதனுக்காக** சுவிசேஷம் அறிவிக்க வனாந்திரத்திற்குச் சென்றார்.

(' ஆனால் இன்று சிலர் சபையானாலும்,மிஷனரி ஸ்தாபனமானாலும் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக சற்று **தாழ்ந்த பதவியில்** கொஞ்சநாள் ஊழியம் செய்யுங்கள் என்றோ,ஒரு **சிறிய சபைக்கு** இடமாற்றம் செய்து கொஞ்சநாள் ஊழியம் செய்யுங்கள் என்றோ கூறினால் பலர் அதை ஈகோ பிரச்சனையாக கருதி அவர்கள் கோபத்தை ஊழியத்தின்மீதும் நிர்வாகத்தின்மீதும் காண்பிப்பார்கள். சிலர் கத்த்தரின்மீதும் கோபத்தை காட்டுகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு **ஜெபம்**செய்ய ஆசைவருவதில்லை. **வேதம்** அறவே வாசிப்பதில்லை. இப்படி செய்து அறவே தேவனைவிட்டு விலகிபோய்விடுகிறார்கள். இந்த பிலிப்பின் செய்தி அப்படிப்பட்டவர் களுக்கு பிரயோஜமாக இருக்கவேண்டும் என்பதற்காக **டாக்டர்.முரளிதர்** அவர்கள் எழுதிய செய்தி யில்அவர் உத்தரவுஇல்லாமலே நான்உள்ளேபுகுந்து என்உள்ளத்தின்பாரத்தை பகிர்ந்துகொண்டேன்)

அந்த **வனாந்திரத்தின் வழியாய்** எருசலேமிலிருந்து **எத்தியோப்பியாவுக்கு** இரதத்திலே பிரயாணம் செய்துகொண்டிருந்த அந்த **எத்தியோப்பிய மந்திரியுடன்** போய் சேர்ந்துக்கொள்ளும்படி **ஆவியானவர்** பிலிப்புக்கு கட்டளையிட்டார். அப்போது பிலிப்பு ஓடிப்போய் அந்த இரதத்தோடு சேர்ந்தார் என்று வேதம் கூறுகின்றது. **"பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக்கேட்டு நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா"** என்று கேள்விகேட்டு **சுவிசேஷம் அறிவிக்கும் ஊழிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கிறான்.**(அப் 8:30).

**பிலிப்பு** அன்று **சுவிசேஷம்**அறிவித்த **சூழ்நிலையை கற்பனை**செய்துபாருங்கள். அன்று அந்த குதிரைகளின் வேகத்தைவிட அதிவேகமாக பிலிப்பு **ஓடியிருக்கவேண்டும். ஓடிக்கொண்டே** அந்த இரதத்தின் இரைச்சலின் நடுவே அந்த **மந்திரி வாசிக்கிறது என்னவென்பதை பிலிப்புவினால்**

அறிந்துக்கொள்ள முடிந்தது. இந்த **இரண்டு செயல்களுமே** அசாதாரணமான செயல்கள் ஆகும். இவைகளை **பிலிப்பு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால்** மட்டுமே செய்திருக்கக்கூடும். பரிசுத்த ஆவியானவர்தான் **தாழ்மையை** கற்றுக்கொடுத்து ஒடிக்கொண்டே சுவிசேஷம் அறிவிப்பதை முறுமுறுப்பு இல்லாமல் நிறைவேற்ற கற்றுக்கொடுத்திருப்பார். இதை கவனித்த அந்த மந்திரி **பிலிப்பை ஒரு விசேஷமான மனிதர்** என்று உணர்ந்து அவரை **தன்னுடைய இரதத்திலே ஏற்றி** தன்னோடு உட்காரும்படி வேண்டிக் கொண்டான்.(அப் 8:31).

அன்று பிலிப்பு அவனோடு **சுவிசேஷத்தைப்** பகிர்ந்துக்கொண்டதின் விளைவாக **எத்தியோப்பியா**விலேயே அதிக உயர்ந்த பதவிவகிக்கும் செல்வாக்குள்ள மந்திரி பதவி வகிக்கும் ஒருவர் **இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானமும்** பெற்றார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு பிலிப்பு **"என்னை எத்தியோப்பியாவுக்கு அழையுங்கள் நான்வந்து உங்கள் நாட்டில் கன்வென்ஷனில் பேசுவேன், சுவிசேஷம் அறிவிப்பேன்** என்று கூறவில்லை!. அந்த **எத்தியோப்பிய மந்திரியின்** மூலமாகவே அந்நாட்டில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதுதான் தேவனுடைய சித்தமாயிருந்தது. **பிலிப்புவோ** தனிமனிதருக்கு **சுவிசேஷம்** அறிவித்தவுடன் **தேவ ஆவியானவருடைய** வழி நடத்துதலுக்கு **கட்டுப்பட்டவராய்** அவ்விடத்திலிருந்து மறைந்து **ஆசோத்திலெ** காணப்பட்டு அதன்பின் அவ்விடத்திலிருந்து பிரயாணம்பண்ணி **செசரியாவுக்கு** வருகிற வரையில் வழியெங்கும் சகல பட்டணங்களிலும் **சுவிசேஷத்தை** பிரசங்கித்துக்கொண்டு வந்தார்"அப்8:40 என்று கூறப்பட்டுள்ளது. இதன்பிறகு எங்கும் போகாமல் **பிலிப்பு செசரியாவிலே தங்கி** தன் ஊழியத்தை தொடர்ந்திருக்கக்கூடும். ஏனெனில் பவுலும் அவரை சேர்ந்தவர்களும் இப்பட்டிணத்தில்தான் பிலிப்புவின் வீட்டில் தங்கினார்கள் என்று அப் 21:8ம் வசனத்தில் நாம் வாசித்தோம்.

இப்படியாக தன்னுடைய ஆவிக்குரிய நல்ல தகுதிகளினாலே அப்போஸ்தலரால் தெரிந்தெடுக்கப் பட்டும், ஒரு **எளியபொறுப்பை** மனதார ஏற்றுக்கொண்டு அந்த **சிறு ஊழியத்தில்** பிலிப்பு சிறப்பாக செயல்பட்டது மட்டுமில்லாமல், தொடர்ந்து ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு முழுவதுமாக கட்டுப்பாடு, தன் விருப்பு வெறுப்புகளையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, உண்மையாய் ஊழியம் செய்த **பிலிப்புவை** மட்டுமே வேதம் **சுவிசேஷகன்(Evangelist)** என்று அழைக்கின்றது.

இவ்வாறு சிறப்பான ஊழியத்தைச் செய்த பிலிப்புவுக்கு பிரதிபலனாக கர்த்தர் அருளிய ஆசீர்வாதம் என்ன தெரியுமா? **தீர்க்கதரிசனம்** சொல்லுகிற நான்கு **குமாரத்திகளை பிலிப்புவின் குடும்பத்தில் எழுப்பி அவர்களையும் ஊழியத்தையும் உபயோகித்தார்**.அப் 21:9. கர்த்தருக்கு உத்தமும்,உண்மையுமாக ஊழியம் செய்யும் ஊழியர்களின் **சந்ததியை ஆண்டவர் பிள்ளைகள்** மூலமாகவும் ஆசீர்வதிக்கிறார் என்பதற்கு **பிலிப்புவின்** குடும்பம் ஒரு சான்றாக அமைந்திருக்கிறது. **ஆசீர்வாதம்** என்று கூறும்பொழுது அது **உலக பிரகாரமான** ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல, அதைவிட மேலான **ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத்** தம் ஊழியர்களுக்கு தேவன் அருளுகிறார் என்பதை இங்கு காண்கிறோம்.

**அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாததினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.** எபே 1:3.

**ஜாமக்காரன் குறிப்பு:** **Dr.புஷ்பராஜா**கிய நான் **Dr.பில்லிகிரஹாகாம்** அவர்கள் **ஹாலந்து** தேசத்தில் ஆம்ஸ்டர்டேம் என்ற இடத்தில் நடத்திய உலக ஊழியர்கள் மகா நாட்டில் கலந்துக்கொள்ள நானும், திருநெல்வேலி திருமண்டல பிஷப்.Rt.Rev.**ஜேஸன்தர்மராஜ்** அவர்களும் கலந்துக் கொண்டோம். எங்கள் இருவரையும் ஒரே அறையில் தங்க ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் பெரிய மண்டபத்தில் காலையிலிருந்து - இரவுவரை மூன்று கூட்டங்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒவ்வொரு கூட்டம் முடிந்தவுடன் சாப்பிடும் மண்டபத்துக்கு நாங்கள் யாவரும் செல்வோம். அங்கு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும் ஏராளமான ஊழியர்கள், **சிறிய,பெரிய பிரசங்கிமார்கள்** பலர் வந்திருந்தனர். பலருடைய **கையில் முன்னேற்பாட்டுடன்**

கட்டுக்கட்டாக தங்கள் விலாசம் அச்சடித்த விசிட்டிங் கார்டுகளை கைகளில் வைத்துக்கொண்டு அங்கு வந்திருந்த ஒவ்வொரு உலக நாட்டு ஊழிய தலைவர்களிடம் சென்று அவர்களிடம் தங்களை அறிமுகப்படுத்தி நான் நன்றாக பிரசங்கம் செய்வேன். எனக்கு சுகம் அளிக்கும் வல்லமையை கர்த்தர் கொடுத்திருக்கிறார், தீர்க்கதரிசன வரமும் எனக்கு உண்டு என்றெல்லாம் தங்களைக்குறித்து அவர்களை விவரித்துகூறி தயராக தன் கையில் கொண்டுவந்த தங்கள் ஊழியத்தில் எடுத்த போட்டோ ஆல்பத்தை காட்டி தன் பிரசங்கத்தில் இத்தனை பிசாசுகள் ஓடின என்று கூறி அதற்கு ஆதாரமாக கீழே விழுந்து கிடக்கும் பெண்களின் புகைப்படத்தை காட்டி என்னை உங்கள் நாட்டுக்கு அழைத்தால் உங்கள் நாட்டில் உங்கள் சபையில் பல பிசாசுகளை விரட்டுவேன். நல்ல ஊழியம் செய்வேன் என்றெல்லாம் கூறிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் ஒரு புகைப்படத்தை ஒரு வெள்ளைக்காரரிடம் கொடுத்து இதில் காணப்படும் இத்தனை பிள்ளைகளும் நான் வளர்த்தும் அனாதை பிள்ளைகள் ஆகும். எங்களுக்கு பணஉதவி தேவை, இவர்களுக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்று கெஞ்சி கூறுவதை கண்டு நாங்கள் சிரித்தோம். அவர்களில் ஒருவர் ஒரு ஓலைகுடிசையை காட்டி இதுதான் எங்கள் வீடு. இதுதான் எங்கள் ஆலயம் உதவி செய்தால் **அனாதைபிள்ளைகள்** மழையில் நனையாமல் வாழ நல்ல கட்டிடம் கட்டுவோம் என்று ஒவ்வொருவரிடமும் இதே தரித்திர பாட்டை பாடி முடித்தார்கள். அந்த வெள்ளையர் ஒருவரிடம் அந்த ஊழியர்கள் கொடுத்த புகைப்படத்தை நாங்கள் காண நேர்ந்தது. அதில் குறிப்பிட்ட ஒரு ஊழியரை நான் நன்கு அறிவேன். அவர் கொடுத்த போட்டோவில் வேறு ஒரு ஊழியரின் **அனாதை இல்லத்தின் போர்டு** இருப்பதை கண்டேன். அந்த போர்டு பக்கத்தில் **இவர் நின்று** போட்டோ எடுத்து இதுதான் என் **அனாதை விடுதி, இதுதான் என் ஆலயம்** என்று கூறியிருக்கிறார். வெளிநாட்டு ஸ்தாபன பணஉதவிக்காக இப்படிப்பட்ட ஊழியர்கள் பொய்களை அள்ளிவிட்டு வெளிநாட்டு ஸ்தாபன விலாசம்தேடி அலைவது எத்தனை அவமானம். **உலக ஊழியர்கள்** நம் **இந்திய ஊழியர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்.** அப்படி ஒரு உதவி கிடைத்தாலும் இவர்கள் உண்மையாக அந்த பணத்தை செலவழிப்பார்களா? கர்த்தர் அப்படிப்பட்ட ஊழியத்தை ஆசீர்வதிப்பாரா? வெளிநாட்டில் பண உதவி பெற எத்தனை ஊழியர்கள் பொய்யான போட்டோக்களை எடுத்து காண்பிக்கிறார்கள். இவர்களுக்கு **பிலிப்புவின் வனாந்திர ஊழிய பிரசங்கம் ஒரு உணர்வை உண்டாக்கட்டும்.** ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# வடஇந்திய ஊழியங்கள்:

வரும் மாதங்களில் மிக அதிகமான ஊழியங்கள் வடகிழக்கு இந்திய மாநிலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியில் வாழும் **ஜாமக்காரன்** வாசகர்களின் **குடும்பங்களை நேரில்** பார்க்கவும்,ஆவிக்குரிய விஷயங்களையும், வேத ரகசியங்களையும் மனம்விட்டு பேசவும் நல்ல வாய்ப்பை கர்த்தர் ஏற்பாடு செய்துள்ளார் என்று நம்புகிறேன்.

வடஇந்திய கிராம ஊழியத்தையும், வடஇந்தியாவில் உள்ள **மிஷனரி குடும்பங்களையும்** நேரில் சந்தித்து உரையாட இது நல்ல சந்தர்ப்பம் ஆகும். இதை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இப்போதே உங்கள் கேள்விகளை,வேத சந்தேகங்களை ஆயத்தப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். குடும்ப பிரச்சனைகளைக்குறித்தும் என்னிடம்பேசி அறிந்துக்கொள்ளலாம். அவைகளைக்குறித்து ஆலோசனைபெறவும் கர்த்தர் கிருபை செய்வாராக. இதற்குமுன் இந்தியாவின் மேற்குபகுதிக்கும், பம்பாய்,மஹாராஷ்ட்ரா,மத்தியபிரதேசம் ஆகிய இடங்களுக்குதான் அதிகமான **நாட்களை** சபை களுக்கும் ஜெபகுழுக்களுக்கும் ஒதுக்கிவைத்தேன். இம்முறை ஏறைக்குறைய 23ஆண்டுகளுக்கு பிறகு இந்தியாவின் வடகிழக்கு **சட்டீஸ்கர், ஆந்திராவின் வடக்குபாகம்** ஆகிய இடங்களுக்கு என் பயண ஏற்பாடுகளை செய்துள்ளேன்.

இந்த **ஜீன் மாத(2014) ஜாமக்காரன்** உங்கள் கைகளில் கிடைக்கும்போது நான் **நேபாளம்** பக்கத்தில், **இந்திய எல்லை** பகுதியான **கோரக்பூர்** பகுதியியல் ஊழியம் செய்துகொண்டிருப்பேன். இந்த **ஊழிய செலவினங்களை** சந்தித்து ஏற்பாடு செய்து ஆங்காங்குள்ள எல்லா வாசகர்களுக்கும், திருச்சபை ஆயர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

# பரிசுத்த ஆவியானவர் யார்?

**Selected**

இன்றைய நாட்களில் நம்மிடையே பரிசுத்த ஆவியானவரைப்பற்றி தவறான போதனைகள் மற்றும் புரிந்துக்கொள்ளல்கள் பரவலாக நிறைய இருக்கின்றன. மேலும் ஆவியானவரைப்பற்றி சில கேள்விகள் மூலம் நம் முழுமையாக தெரிந்துக்கொள்ளலாம்.

**பரிசுத்தஆவியானவராக இருக்கின்றார்?:**

யோவான் 14:16-18 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார்.

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்.

நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன் உங்களிடத்தில் வருவேன். அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவரை வாக்குத்தத்தம் செய்தது இயேசுகிறிஸ்துதான். பரிசுத்த ஆவியானவர் **காற்று அல்ல,** அவர் ஒரு ஆளுமை தன்மையுடைய நபராக இருக்கின்றார். அவர் **சக்தி, வல்லமை** என்பதை காட்டிலும் அதிகமாக இருக்கின்றார்.

தியானிக்க அல்லது ஆராய்ச்சிக்காக குறிப்புகள்: 1. பரிசுத்த ஆவியானவர் ஆவியாக இருக்கிறார். 2. அவர் ஒரு நபராக இருக்கின்றார். 3. பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவராக இருக்கின்றார்.

**I ) பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆவியாக இருக்கின்றார்:**

வேதத்தில் Ruach என்ற எபிரேய வார்த்தைக்கு **ஆவி, காற்று, சுவாசம்** மற்றும் தேவனுடைய ஆவி என்றெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் Pneuma என்ற வார்த்தைக்கு புதிய ஏற்பாட்டில் **மனிதனுடைய ஆவி**(1கொரி 2:11, நீதி 20:27). **தேவன்**(யோ 4:24),**தூதர்கள்** (எபி 1:13-14) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தெய்வீக ஜீவிகளை குறிப்பிடுகையில் ஆவி என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேதத்தில் Ruach மற்றும் Pneuma என்ற எபிரேய கிரேக்க வார்த்தைகள் காற்று,சுவாசம் என்று பொருள்படுகிறது. இவ்வார்த்தை உயிருள்ள ஜீவிகளின் குறிப்பாக கடவுள் மற்றும் மனிதன் ஆகியோரில் உள்ள காணப்படாத உண்மை நிலையைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆவி என்பது, தேவன் நமக்குள் வைத்துள்ள அவரது இயல்பான உள்ளான பொறியாக இருக்கலாம்.(சக 12:1, பிர 12:7,யாக் 2:26, ரோ 8:15, 1கொரி 4:21, கலா 6:1).

**II ) பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்கின்றார்:**

ஒரு நபராக பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார் எனில், ஒரு நபரின் பண்புகள், செயல்பாடுகளையும், அவர் உடையவராக இருப்பினும், இன்று பரிசுத்த ஆவியானவரை ஏன் தவறாக பயன்படுத்துகின்றார்கள் என்பதற்கு பதில் கண்டுபிடிப்போம்.

**அ) நபரின் பண்புகள்:**

1).**நியாயந்தீர்க்க முடியும்-** அப் 15:29. "அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது **பரிசுத்த ஆவிக்கும்** எங்களுக்கும் நலமாகக் கண்டது"

2). **சிந்திக்க முடியும்-** ரோம 8:27 "இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்"

3). **சித்தம் அல்லது விருப்பம்-** 1 கொரி 12:11, எபி 2:4 "அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே வரங்களை அவனவனுக்குப் பகிர்ந்துக்கொடுத்தார்"

4). **அறிவு** - 1கொரி 2:11 "தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்"

5). **உணர்வுகள்** - அன்பு, துக்கம்,சந்தோஷம். ரோம 15:32 "ஆவியானவரின் அன்பின் நிமித்தம்" எபே 4:30- "பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்", 1தெச 1:6- பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே" இப்படிப்பட்ட பண்புகள் பரிசுத்த ஆவியானவருக்கும் உண்டு.

**ஆ).நபரின் செயல்பாடுகள்:**

1). **போதித்து நினைப்பூட்டுவார்-** யோ 14:26 "பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்"

2). **சாட்சி கொடுத்தார்:** - யோ 15:26 "சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார்".

3). **சத்தியத்திற்குள் நடத்துவார்** - யோ 16:13 "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்".

4). **பேசுவார்** - யோ 16:13 "அவர் தம்முடைய சுயமாய் பேசாமல்"

5). **கேள்விப்படுவார்** - யோ 16:13 "தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி"

6). **அறிவிப்பார்** - யோ 16:13 "வரப்போகிறவ காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"

7). **தடை செய்பவர்** - அப் 16:16 "ஆசியாவிலே வசனத்தை சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடைப்பண்ணப்பட்டு"

8). **உயிர்பிப்பார்-** ரோ 8:11 "உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்"

9). **வெளிப்படுத்துவார்** - 1 கொரி 2:10 "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்"

10). **ஆராய்வார்** - 1 கொரி 2:10 "ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்"

11). **வாக்குத்தத்தம் செய்வார்** - கலா 3:14 "ஆவியைக்குறித்து சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று"

12). **ஐக்கியம் கொள்வார்** - 2 கொரி 13:14 " பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்"

13). **பிராாத்தனை செய்வார்** - ரோம 8:26,27 "ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்"

14). **அழைப்பார்** - வெளி 22:17 "ஆவியும்,மணவாட்டியும் வா என்கிறார்கள்"

15). **நடத்துவார்** - லூாக் 4:1, ரோம 8:14 " எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ"

**இ). பரிசுத்த ஆவியானவர் நம்மை அறிவார், நம்மை தங்குகிறார் இவைகள் ஆவியானவரைப்பற்றி விரங்கள் ஆகும்.**

1). **ஆவியை அவித்துப்போடக்கூடும்.** 1 தெச 5:19 "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்"

2). **பொய் சொன்னார்கள்** - அப் 5:3 "பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?"

3).**துக்கப்படுத்தவேண்டாம்-** எபே 4:30 "தேவனுடைய பரிசுத்தஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்"

4). **தூஷிக்கக்கூடாது** - மத் 12:31, 32 " ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை"

இதனாலேயே இன்று கிறிஸ்தவமத வட்டாரத்திலே பரிசுத்த ஆவியானவரைப்பற்றி எத்தனை விதமானபோதனைகள்,குழப்பங்கள். காரணம், என்னவெனில், வேத வசன எச்சரிக்கை பெற்றும் மக்கள் அதை சுயவிருப்பமான வழியில் வியாக்கியானப்படுத்துகின்றனர். **ஆவிக்குரியவர்கள்** ஆவிக்குரியவைகளை **ஆவிக்குரியவைகளோடு** ஒப்பிட்டு பார்க்க மறுப்பதால் வரும் விளைவே இத்தனை குழப்பங்கள். பரிசுத்த ஆவியானவர் இதற்கு காரணர் அல்ல என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

**ஈ). பரிசுத்த ஆவியானவர் தனிமையானவர்:**

பிதாவாகிய கடவுள்,குமாரானகிய கடவுள், பரிசுத்த ஆவியானவராகிய கடவுள், இவர்கள் மூவரும் தனிதனி நபர்கள், அதே சமயம் இவர்கள் மூவரும் வேறுவேறானவர்கள் அல்ல!. மூவரும் ஒருவரே!

உதாரணமாக, இயேசு கன்னி மரியாளின் வயிற்றில் பிறக்கும் முன்னே, பரிசுத்த ஆவியானவர் இருந்தார். இந்த இடத்தில் இயேசு வேறு. **ஆவியானவர் வேறு,**(லூக் 1:26,35,15). எலிசபெத் வயிற்றிலிருந்த யோவான் திருமுழுக்குனர். இவர் இயேசு பிறக்க ஆறுமாதம் முன்பே பரிசுத்த ஆவியை பெற்றார். பரிசுத்தஆவியானவருக்கும் பிதா குமாரன் போல இயல்புகள் அல்லது பண்புகள் உண்டு. எனவே இவர் தனியானவர். அடுத்ததாக, இயேசுவின் திருமுழுக்கிலே (மத் 3:16,17) பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்து பிதாவினால் அனுப்பபட்ட அவரின் குமாரன் என்று யோவானுக்கு அடையாளம்காட்ட புறாவின் வடிவில் இயேசுவின் மேலே வந்தார். அப்படியானால் எப்படி இருவரும் **ஒரே ஆளாக** இருக்கமுடியும்? அருமையானவர்களே பரிசுத்த ஆவியானவரை பற்றிய மனித போதனை களினால் நாம் குழப்பினால், அதற்கு பரிசுத்த ஆவியானவர் பொறுப்பல்ல. மாறாக, நாம் தான் வேதத்தை பொறுமையாக படித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும்.(யோ 5:39).

மத் 12:32 "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும் எவனாகிலும் பரிசுத்தஆவிக்கு விரோதமாகப்பேசினால் அது இம்மையிலும்,மறுமையிலும் அவனக்கு மன்னிக்கப்படுவதில்லை" இந்த வசனத்தின்படி இயேசு கிறிஸ்து **வேறெ ஒரு** நபர் பரிசுத்தஆவியானவர் **வேறு ஒரு நபர்** ஆகும். யோ 14:16ன்படி இயேசுவே அப்போஸ்தலர்களிடம் "வேறொரு தேற்றரவாளனை நான் அனுப்புவேன்"என்றார். எனவே பிதா தான் குமாரன்,குமாரன்தான் பரிசுத்தஆவியானவர். பரிசுத்தஆவியானவர்தான் பிதா என்ற போதனை களில் மூவரும் ஒன்றாக இருக்கிறார்கள்.மூவரும் தனித்தனியாகவும் இயங்கினார்கள் என்று அறியமுடிகிறது.

**III ) பரிசுத்த ஆவியானவர் கடவுளாக(தெய்வீகமானவராக) இருக்கின்றார்:**

பிதாவாகிய கடவுளோடும்,குமாரனாகிய கடவுளோடும்,பரிசுத்த ஆவியானவரும் சமமானவர் ஆகும். உதாரணமாக, நமக்கு திருமுழுக்கை கட்டளையிட்ட இயேசுகிறிஸ்து, **பிதா,குமாரன்,பரிசுத்த ஆவியின்** நாமத்தினாலே திருமுழுக்கை பெற கட்டளையிட்டுள்ளார்(மத் 28:19-20).

**கடவுள் என்றால்: நித்தியமானவர்(Eternel),**
**சகலமும் அறிந்தவர்(All Knowing),**
**எல்லாவற்றையும் படைத்தவர்(Creator),**
**எல்லா வல்லமையும் உள்ளவர்(All Powerful),**
**எங்கும் நிறைந்திருப்பவர்(Every Where).**

**பரிசுத்த ஆவியானவர்** வெறும்காற்றோ,சக்தியோஅல்ல. அவர் **ஆள்தத்துவம் உள்ள ஒரு** நபராக இருக்கிறார். ஒரு நபருக்கு உரிய பண்புகள் செயல்பாடுகள் அவரிடம் உண்டு. மேலும் அவர் **தேவத்துவத்திலும்** ஒருவராக இருக்கிறார். இவரிடம் தெய்வீகதன்மை உண்டு. ஆகையால், மனிதருடைய போதனைகளால் நாம் குழப்பமடையாமல், பரிசுத்தஆவியானவர் நமக்கு பரிசுத்த வேதாக மத்தின் வெளிச்சத்திலே அவரை அறிந்து,அவர் காண்பிக்கிற கிறிஸ்துவின் வழியிலே நடப்போம்.அப் 2:38ன்படி திருமுழுக்கிலே பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தினை பெறுவோம். அவருடைய **வரங்களை** தேடுவதைவிட ஆவியானவரோதாமே ஐக்கியமாயிருப்பதற்கு முதலிடம் தருவோம்.

# வித்தியாசமான இரத்தசாட்சி

இயேசுகிறிஸ்துவை இரட்சகராக, பாவமன்னிப்பைஅருளுகிறவராக உண்மையான,உயிருள்ள தெய்வமாக மற்றவர்களுக்கு அறிவிக்கும்போது, அறிக்கை செய்யும்போது மிஷனரிகள் **கொல்லப்படு வதை** அவர்கள் இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள் என்று கூறக்கேள்விப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எல்லாரும் கிறிஸ்துவை இரட்சகராக அறிவித்த காரணத்தால் அனைவருமே உயிரோடு கொல்லப்பட்டார்கள். **ஆப்பிரிக்கா,நியூகினி தீவுகள்,ரஷ்யா,சீனா** இப்படிப்பட்ட நாடுகளில் இயேசுவை அறிவிக்க சென்ற பலர் அங்குள்ள மக்களால் கொல்லப்பட்டு இரத்த சாட்சிகளாய் மரித்தனர்.

ஆனால் **மார்டீன் லூத்தர்** கத்தோலிக்க சபையிலிருந்து **புராட்டஸ்டன்ட் சீர்திருத்த பிரிவை** தொடங்கிய காலத்தில் பலர் வேத புத்தகத்தின் அருமையை கர்த்தரின் வசனத்தின் வல்லமையை, வசனத்தின் ஆறுதலைருசிக்கவும் அனுபவிக்கவும் வாஞ்சித்தார்கள். ஆனால் அந்த சீர்திருத்த கால ஆரம்பத்தில் பாரம்பரிய கிறிஸ்தவ கத்தோலிக்க சபையானது கிறிஸ்துவையும்,மரியாளையும் மரித்த பரிசுத்தவான்களின் **சிலைகளை**மட்டும் வணங்கவும்,சில கிறிஸ்தவ சடங்காசாரமுறைகளை பின்பற்றவும் கிறிஸ்தவத்திலேயே சில மூடநம்பிக்கைகளை பின்பற்றவும், கிறிஸ்தவ மத தலைவர்கள் சபை மக்களை கட்டாயப்படுத்தினர். நாட்டின் ஆளுகையும் அவர்கள் கையில்தான் இருந்தது. அவர்கள் கட்டளையின்படிதான் சபைகளும் நடத்தப்பட்டது.

## வேதம் வாசித்ததால் கொல்லப்பட்ட இரத்தசாட்சி:

**இங்கிலாந்து** தேசத்தில் சீர்திருத்த சபை தொடங்கிய ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ பெற்றோரால் உண்மையாய் சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படி வளர்த்தப்பட்ட வாலிபன்தான் **வில்லியம் ஹன்டர்**(William Hunter) என்ற வாலிபன் ஆவிக்குரிய பெற்றோர்களால் மெய்யான தெய்வ பக்தியுள்ள வழியில் வளர்க்கப்பட்டவன்.

ஒருநாள் லண்டனில் உள்ள எஸெக்ஸ்(Essex) பட்டிணத்தில் உள்ள பிரென்ட்உட்(Brent Wood) என்னும் இடத்தில் உள்ள ஆலயத்துக்கு ஆராதனையில் கலந்துக்கொள்ள ஆலயம் தொடங்கும் முன்பே ஆலயத்திற்குள் சென்றுவிட்டான். அங்கு மேசையின்மீது வைக்கப்பட்டிருந்த **வேத புத்தகத்தை** கண்ட அவன் ஆவலோடு அதை திறந்து வாசிக்க ஆரம்பித்தான்.

அந்த காலத்தில் **பிஷப்** அரண்மனை, அலுவலகம், அதை அடுத்து பிஷப் நீதிமன்றம் என்று அமைந்திருக்கும். இப்போது சிஎஸ்ஐ டையோசிஸ் **கோர்ட்,** சிஎஸ்ஐ **சினாட்கோர்ட்** என்று ஒன்று பெயருக்கு இயங்கிக்கொண்டிருப்பதுபோல் அல்ல. அக்காலத்தில் பிஷப் கோர்ட்டுக்கு **மரணதண்டனை** தீர்ப்பு கொடுக்கும் அதிகாரம் இருந்தது. அந்த காலத்தில் வேதத்தை மிகமிக பரிசுத்த புத்தகமாக மாத்திரம் **காட்சிபொருளாக** மாத்திரம் வைத்திருந்தனர். பிஷப் குறிப்பிட்டவர்கள் தவிரவேறு யாரும் வேத புத்தகத்தை தொட்டுவிடகூடாது. அத்தனை பரிசுத்த புத்தகமாக மக்களை பயமுறுத்தி நம்ப வைத்திருந்தனர். இந்த வாலிபன் அன்று ஆலயத்துக்குள் இருந்த வேத புத்தகத்தை திறந்து வாசித்தான். வாசிக்க வாசிக்க அவனுள் சொல்லமுடியாத சந்தோஷம் பெருகியது. இச்சமயத்தில் பிஷப் நீதிமன்ற அதிகாரி ஒருவர் அந்த பையன் வேதபுத்தகத்தை கையால் தொட்டு திறந்து வாசிப்பதை பார்த்து அந்த **புனிதமான** புத்தகத்தை நீ எப்படி தொடலாம்?.இது பெரும்குற்றமாக சபை சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. உடனே வில்லியம் ஹன்டர் பிஷப் காவலாளர்களால் கைது செய்யப்பட்டான். அவனிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவனோ அந்த வேதம் வாசிக்க வாசிக்க மிக ஆறுதலாகவும், உலகில்வாழ பல நல்ல **பரிசுத்த வழிகள்** அதில் எழுதப்பட்டுள்ளதாகவும் ஆவிக்குரிய முன்னேற்றத்துக்காக நான் அதை வாசித்தேன் என்றான்.

அந்த அதிகாரி அந்த வாலிபனை பிஷப் முன்பாக கொண்டுபோய் நிறுத்தினார். (இப்போதும் கேரள மாநிலத்தில் உள்ள சில **கிறிஸ்தவ சபைகளின் பிஷப்மார்களின் வீட்டை அரண்மனை** என்றுதான் அழைக்கப்படுகிறது. **மார்தோமா,ஜேக்கபைட்**,கத்தோலிக்க சபைகளின் **பிஷப் இல்லம்** அரண்மனை என்றுதான் அழைக்கப்படுகிறது. **பிஷப்** அவர்களை **திருமேனி** என்றுதான் அழைக்கிறார்கள். திருமேனி என்றால் **உயர்ந்த பரிசுத்த சரீரம்உள்ளவர்** என்று அர்த்தமாகும். அந்த அர்த்தத்தில்தான் பழையகால கேரள உயர்ஜாதி **பிராமணர்கள்** எல்லாரையும் கேரள நாட்டிலுள்ள அனைவரும் **திருமேனி** என்றுதான் அழைப்பார்கள். இப்போதும் இந்த நவீன காலத்திலும் பலர் அப்படியே அழைக்கின்றனர்.

சில இடங்களில் சிஎஸ்ஐ **பிஷப்மார்களும்**,தங்களையும் **திருமேனி** என்று அழைக்கப்படுவதை விரும்புகின்றனர். (அது ராஜ ஸ்தானத்து பெருமைக்குரிய பெயர்).

பிஷப் அவர்கள் வாலிபனைப்பார்த்து மகா பரிசுத்த வேதபுத்தகத்தை நீ தொட்டு வாசிக்க அனுமதியளித்தது யார்? என்று ஆத்திரத்துடன் கேட்டார். அதற்கு அந்த வாலிபன் முன்பு பிஷப் நீதிமன்ற அதிகாரியிடம் கூறிய பதிலையே பிஷப்பிடமும் கூறினான்.

இனி நீ வேதத்தை தொடுவதோ, வாசிப்பதோ கூடாது என்று கண்டிப்பாக அவனுக்கு கட்டளையிட்டார். ஆனால் அந்த பையனோ சற்றும் பயப்படாமல் நான் உயிரோடு இருக்கும் காலம் வரை வேதத்தை எங்கிருந்தாலும் இரகசியமாக வாங்கி படிக்க புதிய தீர்மானம் எடுத்திருப்பதாகவும் அது என்னை பரிசுத்தமாகவும், உண்மையுள்ளவனாகவும் வாழவைக்க உதவும் என்று தான் நம்புவதாகவும் கூறினான்.

அவனின் தீர்க்கமான பதிலால் பிஷப் கோபமுற்று இவன் ஒரு **கிறிஸ்தவ மத விரோதி** என்று குற்றஞ்சாட்டி பிஷப்பின் குற்றசாட்டுடன் நீதிபதிமுன் நிறுத்தப்பட்டான். கிறிஸ்தவ சபைக்கு எதிரான **வேத புரட்டன்** என்று அவன்மேல் குற்றஞ்சாட்டப்பட்டு லண்டனிலிருந்து பெரிய பிஷப்புக்கு அறிக்கை அனுப்பப்பட்டது.

செயின்பால்ஸ் என்ற இடத்திலிருந்த கிறிஸ்தவ மத சம்பந்தமான நீதிமன்றத்துக்குமுன் அவன் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டது. இங்கு அவனை **உயிரோடு எரிக்கப்படவேண்டும்** என்றும் உடனே தீர்ப்பும் வழங்கப்பட்டது.

**கிறிஸ்தவ சமூகம்** - **ஒரு நல்ல கிறிஸ்தவனையே கொல்லும் கொடுமை** அங்கு நடந்தது அந்த வாலிபன் **மரணதண்டனை** நிறைவேற்றும் வரை ஒரு சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். பல நண்பர்கள், உறவினர்கள் அவனை சந்தித்து போனார்கள். பரிதாபப்பட்டார்கள் அவ்வளவே! ஆனால் அந்த பையனை பெற்ற தாயும்-தகப்பனும் ஜெயிலில் அவனை பார்க்க விரும்போதெல்லாம் தன் மகன் மன்னிப்பு கேட்டு மரண தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஆலோசனையை கூறாமல், மகனே நீ தொடங்கிய ஆவிக்குரிய ஜீவிய வழியிலேயே கடைசிவரை தொடர்ந்து நில் என்று அவன் சோர்ந்துபோகாதபடியும் மரணத்துக்கு அவனை ஆயத்தப்படுத்தும் வண்ணமாகவும் ஜெபம் செய்தார்கள். கிறிஸ்துவினிமித்தம் தன் ஜீவனையே இழக்க முன்வந்த தன் மகனுக்காக அந்த பெற்றோர் பெருமையடைந்து **இப்படி ஒரு மகனை எங்களுக்கு கொடுத்தீரே** என்று தேவனை துதித்ததை ஜெயில் அதிகாரிகள் கண்டு அதிசயித்தார்கள்.

அந்த வாலிபன் பெற்றோரோடு கூறினான். அம்மா என்னை ஒரு மர கம்பத்தில் இருக்க கட்டி கீழே நெருப்பை எரிய விட்டு கொல்லப்போகிறார்கள். அந்த நெருப்பு சூடும், எரிச்சலும் கொஞ்சநேரம் மட்டும்தானே! அதற்குள் நான் மரித்துகர்த்தரின் சமூகத்தில்போய் சேர்ந்துவிடுவேன். அங்கு வேதனையோ,எரிச்சலோ இல்லாத அந்த இடத்தில்போய் நிலையான பேரின்பத்தை அனுபவிப்பேனே! அப்படித்தானே நம் வேத புத்தகத்தில் எழுதியிருக்கிறது. **கொஞ்சகாலம் பாடு அனுபவிக்கிறவர்கள்** என்று வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை ஞாபகப்படுத்தி மகன் பெற்றோரை ஆறுதல்படுத்தினான். அந்த கொஞ்சநேரம் அனுபவிக்கபோகிற **நெருப்பின் வேதனைக்குபின்** கிறிஸ்து எனக்கு மகிமையின் **கிரீடத்தை** வாக்கு பண்ணியிருக்கிறார் என்று எல்லாரிடடும் கூறி மகிழ்ந்தான்.

1925ம் ஆண்டு **மார்ச்** மாதம் 27ம் தேதி பொழுது விடிந்தவுடன் அவன் நண்பன் ஒருவன் ஜெயிலுக்கு வந்து அந்த வாலிபனைக்கண்டு **பயப்படாதே** என்று உனக்கு ஆறுதல் கூற வந்தேன் என்று மிகவும் துயரத்துடன் கூறினான். நான் எதற்கும் பயப்படவில்லை என்னை கடைசிவரை தாங்கக்கூடிய ஒன்று என் இருதயத்தில் இருக்கிறது என்று கூறினான். இதை கேட்ட அவன் நண்பன் அதற்குமேல் அவனிடம் பேசமுடியாமல் கதறி அழுதான்.

கொலைகளத்துக்கு அந்த வாலிபன் கொண்டுபோகப்பட்டான். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகு கட்டைகளின்மேல் முழங்கால் படியிட்டான். அந்த வாலிபன் ஹன்டருடைய சொந்த சகோதரன் நல்ல விசுவாசி. அவன் அருகே நின்று மரணசோர்வு தம்பிக்கு உண்டாகமல் இருக்க வசனங்களை ஞாபகப்படுத்திசொல்லி அவனை ஊக்குவித்தான். நெருப்பு பற்றவைக்கப்பட்டது. அப்போது உடனே அவன் சகோதரன் தம்பி.வில்லியம் **திடன்கொள்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** என்று மாத்திரம் சொல் என்றான். நெருப்பு கொழுந்துவிட்டு எரியும்போது அந்த வாலிபன் வில்லியம் கர்த்தாவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்றான். இதுவே அந்த வாலிபனின் கடைசி வார்த்தையாக இருந்தது. அந்த இரத்தசாட்சியின் பொருமையுடனும் முறுமுறுப்பில்லாமலும் தைரியத்துடனும் தன் ஜீவனை விட்டான்.

அந்த ஆரம்ப நாட்களில் வேத புத்தகம் யாரோ ஒரு சிலரிடம்தான் இருந்தது. அதை இரகசியமாய் சென்று வாசிப்பார்கள். வேதம் புத்தகம் வைத்திருந்தாலும், வேதாகமம் வாசித்தாலும் தண்டனை என்று அறிவிக்கப்பட்ட காலம் அது. காரணம்,மக்கள் அதை வாசித்தால் கேள்விகேட்பார்கள். வேதம் வாசித்து மக்கள் விழிப்புணர்வு அடைந்துவிட்டால் அன்றைய ஆயர்கள்,பிஷப்மார் பணம்கேட்டு மக்களை ஏமாற்ற முடியாது. அந்த முறையில்தான் மரித்துப்போன மூதாதையர் பெயரில் **பாவமன்னிப்பு சீட்டு** விலைக்கு விற்கப்பட்டது. ஆகவே வேதபுத்தகம் புனிதமானது. அதை யாரும் தொடக்கூடாது, படிக்கக்கூடாது என்றெல்லாம் ஜனங்களை ஏமாற பண்ணினார்கள். அதையும்மீறி **மார்ட்டீன் லூத்தர்** போல் திருட்டுதனமாக வேதத்தை படித்து உண்மையை தெரிந்து மற்றவர்களுக்கு அதை அறிவித்தததால்தானே புரட்சி வெடித்தது, புராட்டஸ்ட்ன்ட் உருவானது. ஆகவே வேதத்தை தொட்டால் தண்டனை, படித்தால் மரணதண்டனை என்று மக்களை பயமுறுத்தி வைத்திருந்த காலம் அது.

ஆனால் இன்றைக்கு விலை அதிகம் கொடுத்து விலைஉயர்ந்த வேத புத்தகத்தை வாங்கி அதை வாசிக்க மனமில்லாபெயர்கிறிஸ்தவர்கள் எத்தனைப்பேர்.

' **ஒரு பிள்ளைக்கு ஜெபிக்க 2000 ரூபாய்** வாங்கும்படி கர்த்தர் சொன்னார் என்று கூறியதை நம்பின **கிறிஸ்தவ மூடர்கள்** எத்தனைப்பேர். இவர்கள் யோசிக்க மனமற்றவர்கள். வேதம் வாசிக்காமலே இயேசுவின் பெயரில் லஞ்சம் கொடுத்து கர்த்தரின் ஆசீர்வாதத்தை குறுக்குவழியில் பெற்றுக்கொள்ள நினைக்கும் கிறிஸ்தவர்கள் இன்றைக்கும் வளர்ந்துக்கொண்டேயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பொய் ஊழியர்களுக்கு கோடிக்கணக்கில் காணிக்கை கொடுத்து அவர்களை தொடர்ந்து தாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**வேதத்தை கேளாதவனுடைய(வாசிக்காதவனுடைய)ஜெபம் அருவருப்பானது.**நீதி 28:9.

**பெற்றவர்கள் என் வேதத்தை மறந்தார்கள். நான் அவர்கள் பிள்ளைகளை மறப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார். ஓசி 4:6.**

இப்போது நாம் எல்லாரும் பயங்கரமான காலத்தில் இருக்கிறோம். இனி கிறிஸ்தவ ஆராதனை இல்லை, **கிறிஸ்தவ ஆலயம்** கட்டமுடியாது என்கிற காலம் வரப்போகிறது. இப்போதே கிறிஸ்தவ வேத புத்தக கடைகளில் சினிமா புத்தகங்களும்,ஆபாச கதை புத்தகங்களும் சேர்த்து விற்கப்படவேண்டும் என்ற சட்டம் வந்துவிட்டதே! அதனால்தான் CLS,ELS,Bible சொசைட்டி புத்தக கடைகளில் கிறிஸ்தவம் அல்லாத கிறிஸ்தவர்களுக்கு சம்பந்தம் இல்லாத புத்தகங்களும் விற்கப்படுவதை காண்கிறோம்.

ஜாக்கிறதை! **கடைசி காலம், இந்திய அரசியலில் மாற்றம், ஆளுகின்றவர்கள் அனைவரும் இந்துமதம் அல்லாத மற்ற மதங்களை வெறுப்பவர்கள்.** ஜாக்கிறதை!.

ஜாமக்காரன் வாசகர்கள் தங்கள் பிள்ளைகளை வேதம் வாசிக்க சொல்லுங்கள். வேதம் கிடைக்காத காலம் வரப்போகிறது!. பெற்றவர்கள் வேதம் வாசியுங்கள். அந்த வேதம் உங்களை சரியான வழியில் வழிநடத்தும்,உண்மையான ஊழியர்களை **அடையாளம்காட்டும்,**அந்த வேதம் **உண்மையான உபதேசம்** எது?என்பதையும் காட்டும். உங்கள் சபைகாட்டாத,உங்கள் பாஸ்டர்கள் காட்டாத, உங்கள் பிஷப்மார்கள் காட்டாத **உண்மைசத்தியத்தை,உண்மை** உபதேசத்தை ஆறுதலை சுகத்தை வேதவசனம் காட்டும்.

அந்த வாலிபன் **வில்லியம்** இயேசுவை **அறிவித்ததற்காக** கொல்லப்படவில்லை. **வேத புத்தகம் வாசித்ததற்காக** கொல்லப்பட்டான். வித்தியாசமான **இரத்தசாட்சி.**

இப்போது அப்படிப்பட்ட காலத்திலா நாம் இருக்கிறோம். இது **கிருபையின்** காலம். வேதம் உன் கையில் இருக்கிறது. ஒரு நாளில் **24மணிநேரத்தில்** வேதம் வாசிக்க எவ்வளவே நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள். வேதத்தை வாசிக்காத **ஊழியர்கள்-பாஸ்டர்கள்** இப்போதும் உண்டு. இதை அவர்களின் பிள்ளைகள் கூறுகிறார்கள் என் தகப்பனர் பாஸ்டர் லூத்தரன், சிஎஸ்ஐ சபையின் ஆயர். ஆனால் அவர் வேதத்தை வாசிக்கிறதை எங்களால் காணமுடிகிறதில்லை என்கிறார்கள். மனைவிமார்களும் தங்கள் கணவர் மார்களை குறித்து அப்படியே கூறுகிறார்கள்: என் கணவருக்கு சபையின் மற்ற வேலையெல்லாம் செய்ய நேரம் இருக்கிறது. ஆனால் **வேதபுத்தகம்** படிக்கநேரம் இல்லை. என்றாலும் அவர் ஒவ்வொரு ஞாயிற்கிழமைகளிலும் ஆராதனையில் பிரசங்கிக்கிறார் என்கிறார்கள்!. என்ன பரிதாபம்?

ஜாக்கிதை-கடைசிக்காலம்-வேதத்தை வாசிக்காத பெயர்கிறிஸ்தவர்கள், ஊழியர், பாஸ்டர்கள்,பிஷப்மார் நிச்சயம் பரலோகம் போகமுடியாது. ❖❖❖❖❖❖❖❖❖


D r . M . G . E . P U S H P A R A J

S A L E M -636 005. INDIA

BANK ACCOUNT NUMBERS:

| | |
|---|---|
| **STATE BANK OF INDIA**(SALEM-1970)<br>**A/C No: 10764116842**<br>SWIFT CODE - SBININBB637- 10764116842<br>IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 | **STATE BANK OF TRAVANGORE**<br>(SALEM BRANCH CODE - 70328)<br>**A/C No: 57041760879.**<br>SWIFT CODE - SBTR0000328- 57041760879<br>IFSC CODE SBTR0000328,<br>RBCMS BXX - 57041760879. |
| **CANARA BANK - SALEM**<br>(SURAMANGALAM BRANCH)<br>**A/C No: 1219101013622.**<br>SWIFT CODE - CNRB0001219 -1219101013622.<br>IFSC CODE - IFSC CNRB0001219-<br>1219101013622. | **SYNDICATE BANK** (SLM SURAMANGALAM BRAN)<br>**A/C.No: 2200009312.**<br>SWIFT CODE - SYNBINBB027 6293-2200009312.<br>IFSC CODE - SYNB0006293-2200009312.<br>I |

**INDIAN OVERSEAS BANK**

(SALEM MAIN - 000080 )

**A/C No: 008001000024114**

IFSC CODE - IOBA0000080,

# ஜெயித்தது BJP அல்ல

நடந்துமுடிந்த **இந்திய பாராளுமன்ற**(MP)தேர்தலில் BJP கட்சி அரிதி பெரும்பான்மையுடன் ஜெயித்துள்ளது. இந்திய வரலாற்றில் **30 வருடத்துக்குபிறகு** தனி கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளது. BJP சில கட்சிகளுடன் கூட்டணி வைத்திருந்தாலும் தனி கட்சியாக ஆட்சி அமைக்கும்அளவு பெரும்பான்மையுடன் BJP வெற்றியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது வரலாற்று சிறப்புமிக்க சம்பவமாகும். இந்த வெற்றி **இந்துமதம்சார்ந்த இந்துமத வைராக்கியம்**கொண்ட **பாரதீய ஜனதா கட்சி** (BJP)யின் வெற்றியல்ல! என்று கூறினால் அது மிகையாகாது.

பெரும்பான்மை **இந்திய மக்கள்** திரு.**நரேந்திரமோடி** என்ற **தனி மனிதனின்மேல்** வைத்த **பயத்தோடுகூடிய நம்பிக்கை யாகும்.** மேலும் கடந்த பல வருடங்களாக இந்தியாவில் ஆட்சி நடத்தியவர்களின் வெளிப்படையான **ஊழல்,**அலங்கோலமான அவர்கள் **ஆட்சியின்மீது** மக்களுக்கு ஏற்பட்ட **சலிப்பும்**,வெறுப்புமே காரணமாகும். **காந்தியின்** குடும்பம் என்ற பெயரின் மரியாதைக்கு மக்கள் கொடுத்த முற்றுப்புள்ளி இது. **காங்கிரஸ்க்கு** மாற்று என்று குறிப்பிட்டு இந்திய பிரதமராக தேர்ந்தெடுக்க ஒரு குறிப்பிட்ட **கட்சியோ கூட்டணியோ** ஏதும்இல்லாத நிலையில், **BJP மதவாத கட்சி** என்று அறிந்தும், மாற்று வழியறியாத இந்திய மக்கள் **திரு.மோடி** அவர்களை **மட்டும் நம்பி** அளித்த வெற்றியாகும்.

## BJPமட்டும் காரணமல்ல:

BJPகட்சி அயோத்தியில் **பாபர் மசூதியை** இடித்து தரைமட்டம் ஆக்கியதால் இன்று உலகம் முழுவதும் பரவிய இஸ்லாமியரின் வெறுப்பு வெறியாக மாறி, அதன் காரணமாக இந்தியாவில் மட்டுமல்லாமல், அமெரிக்காவில் இரட்டைகோபுரம் தகர்ப்பு மற்றும் பல நாடுகளில் **குண்டுவெடிப்பு** சம்பவம்,அதன்மூலம் நிரபராதிகளான ஏராளமான மக்களுக்கு ஏற்பட்ட மரணம், காயம், குடும்ப பாதிப்புகள் அத்தனைக்கும் காரணம் BJP & RSS என்ற **தீவிரவாத இயக்கம்** என்று பரவலாக பேசப்பட்டது. ஆனால் அந்த அதிர்ச்சி சம்பவத்துக்கு அன்றைய **ஆளும்கட்சியான காங்கிரசும்** அன்று பிரதமராக இருந்த திரு.**நரசிம்மராவ்** அவர்களும்தான் முக்கிய காரணகர்த்தாக்களாகும்.

**பாபர் மசூதியை** இடிக்காமல்,பிரச்சனை ஏதும் உண்டாகமல், உத்திரபிரதேச **எல்லை** எங்கும், வெளிமாநில மக்கள் உள்ளே நுழையாதபடி ராணுவத்தை அனுப்பி இப்போது **சீல்** வைத்தது போல்உள்ள ஏற்பாடுகளை அன்று இவர்கள் செய்திருந்தால் **இந்திய நாட்டில்** இத்தனை பெரிய குண்டு வெடிவிபத்தையும்,மரணங்களையும் தவிர்த்திருக்கலமே? இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் **கரசேவை** என்ற பெயரில் செங்கல்லை சுமந்த வந்த மக்களை இவர்கள் ராணுவத்தைக்கொண்டு ஆங்காங்கு தடுத்து நிறுத்தியிருக்க முடியாதா?

இந்தியாவில் அரசியல் தலைவர்கள் உண்ணாவிரதம் செய்யபோகிறார்கள் என்று அறிவித்தவுடன் இரவோடு இரவாக அந்த அரசியல் தலைவர்கள் வீட்டில் சென்று அவர்களை கைது செய்து மறுநாள் நாட்டில் நடக்கவிருந்த பல அசம்பாதவிங்களை தடுத்த சம்பவங்கள் எத்தனை?. அப்படியிருக்க ஏன் கரசேவையை **நரசிம்மராவ்** தடுக்கவில்லை?. காரணம், ராஜதந்திரம் என்ற பெயரில் அன்று நடந்தது **அரசியல் விளையாட்டு ஆகும்.** பாபர் மசூதியை இடிப்பதை தடுக்காத அன்றைய உத்திரபிரதேச BJP அரசாங்கத்தின் மீது முழு குற்றத்தை சுமத்தி, BJP அரசாங்கத்தின்மேல் வெறுப்பு உண்டாக்கவும் மத்திய **காங்கிரஸ்** கட்சி ஆட்சி மக்களை தங்கள் பக்கமாக திருப்ப நினைத்த சதியாகும். மற்றொரு பக்கம் இந்தியா முழுவதும்உள்ள BJP கட்சியை, முகமதியர்களுக்கு எதிரானகட்சி என்ற எண்ணத்தை உருவாக்கவேண்டும் என்பதாகும். அந்த வெறுப்பை **சிறுபான்மை இனமான** முஸ்லீம்மதத்தை சேர்ந்த இந்திய **மக்களுக்கு காங்கிரஸ்தான்** ஆதரவு தரும் **கட்சி** என்ற **எண்ணத்தை இதன்மூலம்** உண்டாக்க, அன்றைய **காங்கிரஸ்** தலைமையும், பிரதமர் **நரசிம்மராவ்**

அவர்களும் நடத்திய குறு நாடகம் ஆகும். **மத சார்பற்ற கட்சி** என்ற பெயர் நிலைநாட்ட காங்கிரஸ் தலைமையின் குறிப்பாக முன்னாள் பிரதமரின் **மௌன அரசியல் விளையாட்டுதான் பாபர் மசூதி இடிப்பு சம்பவமாகும்.** அதனால் முழு இந்தியாவும் அடைந்த வேதனை எவ்வளவு? இதன் பின்விளைவு உலகத்தின் அனைத்து பாகங்களிலும் பரவியதே? எங்கும் சமாதான குலைச்சல். இதன்மூலம் மக்கள் அடைந்த வேதனை கொஞ்சநஞ்சமல்ல, இதன்மூலம் மக்கள் BJP கட்சியை வெறுப்பார்கள் என்ற இவர்களின் திட்டத்துக்கு, சமீபத்தில் நடந்த இந்திய தேர்தலில் இந்திய மக்கள் **காங்கிரஸ் கட்சிக்கு** கொடுத்த **சரியான அடியாகும்.** இந்த **தேர்தலில் BJP வெற்றி** அடைய அரசியல் கணிப்பாளர்கள் கூறும் காரணங்களில் அதுவும் ஒன்றாக அமைந்தது. தினசரி இந்தியாவில் **குண்டு வெடிக்காத** நாளேயில்லை என்று கூறத்தக்கதாக இஸ்லாமியர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட வெறுப்பும், வெறியும் இன்றுவரை மாறவில்லை. ஆகவே பாபர் மசூதி இடித்ததற்கு BJP மட்டுமல்ல,அன்றைய ஆட்சியில் இருந்த காங்கிரஸ் ஆட்சியாளரும்தான் காரணராகும்.

## இப்போது தேர்தலில் ஜெயித்தது BJP அல்ல என்றேன்:

காரணம், BJP,RSS, பஜ்ரங்தள் ஆகிய கட்சிகள் யாவும் **இந்துமத** வெறிஉள்ளவர்கள். இவர்கள் **முஸ்லீம் மதத்தை** வெறுப்பவர்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இந்திய தேசத்தில் பெரும்பான்மை மக்களாக மாறிக்கொண்டிருக்கும் **இஸ்லாமியர்களுக்கும் - இந்து மதத்தில் இருப்பவர்களுக்கும்** நிச்சயம் மதகலவரம் வெடிக்கும் என்ற பயம் இந்தியா முழுவதும் உள்ள எல்லார் உள்ளத்திலும் மட்டுமல்ல, BJPயில் உள்ள பலரின் உள்ளத்திலும்கூட **இந்த பயம்** இருந்தது!. பின் எப்படி BJP ஜெயித்தார்கள்?.

முன்புநான் குறிப்பிட்டதுபோல இந்தியாவில் ஆட்சி அமைக்க **காங்கிரஸ்க்கு** மாற்று கட்சி என்ற யாரும் இல்லாத காரணத்தால் **மக்கள் உள்ளத்தில்** BJPமீது பயம் இருந்தாலும் திரு.**மோடி** என்ற தனி நபர்மேல்வைத்த **நம்பிக்கை**தான் வெற்றிக்கு காரணம் ஆகும்.

திரு.**மோடியும்,** RSSஎன்ற **இந்துமத தீவிரவாத** இயக்கத்தில் தனது 8வது வயதிலேயே இணைந்தார். அப்படியே அந்த RSS இயக்க கொள்கையையும் தன் இதயத்தின் அடிதளத்தில் புகைத்துக்கொண்டார். குஜராத்தில் தன் **நல்ல நிர்வாகத்தின்**மூலம் பலநல்ல செயல்களை நடத்தி தன் உள்ளத்தில் உள்ள RSS பாசத்தை தற்காலிகமாக மறைத்துக்கொண்டவர். ஆனால் உள்ளத்தில் அடங்கியிருந்த அந்த RSS மத தீவிரவாதத்தை, குஜராத்தில் RSS இயக்கத்தை கட்டவிழ்த்துவிட்டதால் அவர்கள் **அந்த பயங்கர மூன்று** நாட்களில் குஜாரத்தில் உள்ள இஸ்லாமியர்களை **உயிரோடு வெட்டிகுவித்ததும்**,அவர்களில் இன்றும் 5000த்துக்கும் அதிகமான இஸ்லாமியர்கள் வீடிழந்து, குடும்பம்இழந்து **அகதிகள்** முகாமில் அடிப்படை வசதிகள் இன்றி இப்போதும் வாழ்ந்துக் கொண்டிருப்பதை வெளிஉலகம் அறியவில்லை. திரு.மோடியின் உள்ளத்தில் புதைத்திருந்த RSS கொள்கை அந்த மூன்று நாட்களில் வெளிப்பட்டதே!. இந்த சம்பவம் காரணமான பயம் இந்திய மக்கள் உள்ளத்திலும் மாறாமல் பயந்து கொண்டுதான் வேறு வழியேதும் இல்லாமல் திரு.மோடி அவர்களை ஜெயிக்க வைத்தனர்.

## புதிய பிரதமர்.திரு.மோடி அவர்கள் இந்தியாவின் எல்லா மதத்தினருக்கும் இப்போது பொது தலைவர் ஆகிவிட்டார்.

இந்தியா பல **மதங்களையும்,** பலவித **கலாச்சாரங்களையும்** உள்ளடக்கிய நாடு ஆகும். பல ஆயிரம் **பாஷைகள்,** பல ஆயிரம் **மதங்களும்** ஆயிரக்கணக்கான வித்தியாசமுள்ள **கலாச்சாரங்களும்** நிறைந்த மக்கள் அடங்கியதுதான் இந்திய தேசமாகும். இந்த தேர்தலில் பெரும்பாலான ஓட்டுகளை BJPக்கு அளித்த இந்திய மக்கள் மேலே குறிப்பிட்டப்படி ஒருவித பயத்தோடுதான் திரு.மோடி அவர்களை பிரதமராக தெரிந்தெடுத்துள்ளனர்.

**திரு.மோடி பிரதமராக பொருப்பெடுத்தவுடன் இந்திய மக்களின் இந்த பயத்தை நீக்கும் வகையில் செயல்படவேண்டும் என்பது எங்களின் தாழ்மையான வேண்டுகோள் ஆகும்.**

மக்களின் **பயத்துக்கு** காரணம். திரு.மோடி அவர்களை RSS, பஜ்ரங்தள் என்ற இரண்டுமத தீவிரவாத இயக்கங்கள் **நிழல் இயக்கங்களாக** பிரதமருக்கு பின்னால் இருந்துகொண்டு தங்கள் கொள்கைப்படிதான் இந்திய நாட்டை பிரதமர் நடத்தி செல்லவேண்டும் என்று திரு.**மோடி** அவர்களை கட்டாயப்படுத்தும். இப்போதே RSS இயக்க தலைவர் திரு.நடராஜன் அவர்கள் தங்கள் **வலைதளத்தில்** Hindunatarajan@hotmail.comல் பிரதமர்.மோடி அவர்கள் **தன் மந்திரி சபையில்** சேர்க்கும் மந்திரிகளை **RSS குறிப்பிடும் நபர்களைத்தான்** மந்திரிகளாக நியமிக்கவேண்டும் என்று நாங்கள் (RSS) மோடியை நிர்பந்திப்பதில் தவறேதும் இல்லை என்கிறார். பிரதமர்.**மோடி** ஆட்சிக்கு RSS இயக்கம் ஒரு **ராஜகுருவாக** இருப்பதிலும் தவறில்லை. பிரதமர்.மோடி அவர்களுக்கு(கொல்ஜியம்)(RSS) **ஆலோசனை அமைப்பு தேவை** என்று அவர் பகிரங்கமாகவே எழுதி வெளியிட்டுள்ளார். இது நிச்சயம் பிரதமர்.மோடி அவர்களை **பெரும் சிக்கலில்** ஆழ்த்தும்.

‘ RSS தலைவர் கூறியதை உண்மையாக்கும் விதத்தில் BJPயின் **தேர்தல் வாக்குறுதியாக** திரு.மோடி அவர்கள் நாட்டின் சமாதானத்தை கெடுக்கும் **மூன்று பிரச்சனையுள்ள தேர்தல் அறிக்கைகளை** புத்தகமாக வெளியிட்டு அதை மேடையில் பகிரங்கப்படுத்தியுள்ளார். அதைக்குறித்து மோடி அவர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசும்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதலாவதாக அந்த மூன்று சட்டங்களை நிறைவேற்றுவோம் என்று கூறினார். அவைகளாவன:

1). பாபர் மசூதி இடிக்கப்பட்ட அதே அயோத்தியில் **ராமர்கோவில்** கட்டுவோம் என்றார்கள்.

2). **பசு பாதுகாப்பு சட்டம்** கொண்டுவரப்படும் என்றார்கள்.

3). **பொது சிவில் சட்டம்** கொண்டு வருவோம் என்றார்கள்.

மேலே குறிப்பிட்ட 3 தேர்தல் வாக்குறுதிகளும் திரு.மோடி அவர்கள் நிறைவேற்ற முயலுவாரானால் இந்தியாவில் நிச்சயம் **மதக்கலவரமும்,உள்நாட்டு போரும்** உண்டாகி இந்தியா எங்கும் **இரத்த ஆறு** ஓடும் என்பதில் சந்தேகமில்லை என்று அரசியல் கணிப்பாளார்கள் கூறுகிறதாக செய்திகள் வந்துள்ளன.

மேலே குறிப்பிட்ட 3 தேர்தல் அறிக்கைகளும், **சிறுபான்மை இனம்** என்றழைக்கப்படும் **இஸ்லாமியர்,கிறிஸ்தவர்** போன்ற சிலமதத்தினரை மனதில் வைத்து அறிவித்த அறிக்கையாகும் என்கிறார்கள். மேலும் இந்த **அறிக்கைகள்** அந்த **சிறுபான்மையினரின் வெறுப்பையும், பகையையும்** கூடுதலாக்கும். அது நம் இந்திய தேசத்தின் **சமாதானத்தையும்** கெடுத்து தேசமெங்கும் **மதகலவரத்தை** உண்டாக்கி இந்தியாவின் **பொருளாதாரத்தையே** சீர்குலைக்கும்.

ஒரு **பாபர் மசூதி** இடித்ததையே இஸ்லாமியர் இன்னும் மறக்கவில்லை. அவைகளை மறக்க இயலாத இஸ்லாமியரில் **ஒரு பெரும்கூட்டம்** உலகெங்கும் பழி வாங்க துடித்துக்கொண்டிருக்கிறது. புதிய ஆட்சி தொடங்கியவுடன் பயங்காரவாதத்தை தூண்டும் இந்த தேர்தல் அறிக்கை நிறைவேற்றப்பட்டால் தொடர்ந்து இவர்கள் எப்படி நிம்மதியாக ஆட்சி நடத்தமுடியும்? மக்கள் எப்படி நிம்மதியாக வாழ்வார்கள்?. பிறகு **ஜனாதிபதி ஆட்சி-மறுதேர்தல்** என்று இந்திய அரசியலில் காட்சிகள் மாறும்.

‘ **பசு வதை சட்டம் :** பசுமாடுகளையும்,காளை மாடுகளையும் வெட்டக்கூடாது என்றால் **காளை** இறைச்சியை வழமையாக சாப்பிடும் **இஸ்லாமியர்களையும், கேரளா மாநிலத்தில்** உள்ளவர்களையும் இது வெகுவாக பாதிக்கும். தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்ட அந்த குறிப்பிட்ட மாதங்களிலேயே **காளைகளை** இறைச்சிக்காக வெளிமாநிலங்களுக்கு கொண்டுபோகப்பட்ட வாகனங்களை RSS இயக்கத்தினர் தடை செய்துள்ளார்கள். வட இந்தியாவில் காளை இறைச்சியை கசாப்பு கடைகளுக்கு கொண்டுப்போன தலித் மக்கள் சிலர் கொலை செய்யப்பட்டார்கள் என்ற செய்தி இந்திய மக்களுக்கு ஆபத்தான எச்சரிப்பாக அமைந்ததுள்ளது.

‘ **பொது சிவில் சட்டம்:திருமணம்முதல் மததொழுகை,சவஅடக்கம்,** மத பண்டிகைகளின் **சடங்குகள்,**மதகலாச்சார வழக்கம் போன்ற விஷயங்களில் **இஸ்லாமியரை** மாத்திரம் அல்ல, **இந்து மத்திலேயே**பலபிரிவுகளிலுள்ள பலஜாதி இந்துமதமக்களைஇந்தசட்டம் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.

"**இந்து** மதத்திலேயே **பல ஜாதிகள் உண்டு**". அவரவர்களுக்கென்று **ஜாதி கலாச்சாரம்** கட்டுப்பாடு, வித்தியாசமான **பூஜை முறைமைகள்** உண்டு. அதை எந்த **இந்து மதத்தினரும்** விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இந்தியாவில் **அனைத்து மதத்தினருக்கும் பொதுவான சட்டம்** என்று இவர்கள் கொண்டுவந்தால் RSSல் உள்ள **இந்து மதத்தினரே** அதை எதிர்ப்பார்கள் என்பது நிச்சயம். இந்திய நாட்டில் ஓட்டுபோட்டு திரு.**மோடி** அவர்களை ஜெயிக்க வைத்தவர்கள் அனைவரும் இவைகளைக்குறித்துதான் பிரதான விஷயமாக **பயந்துக்கொண்டிருக்கிறார்கள்.**

## மாநில உறவுகள் பாதிக்கும் சட்டம்:

இந்தியாவின் வடக்கு பகுதி மாநிலமான **காஷ்மீருக்கும்** எதிரான ஒரு சட்டத்தை BJP ஆட்சிக்கு வந்தால் **நடைமுறை** படுத்தப்போகிறார்களாம்!.

## நம் இந்திய அரசியல் ஷரத்து நெ.370வது பிரிவு:

இந்திய தேசத்தில் அண்டை மாநிலமான **காஷ்மீர்** மாநிலத்தில் மட்டும்தான். இந்த சலுகை சட்டம் அமுலில் இருக்கிறது. இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்தில் உள்ளவர்களும் காஷ்மீர் மாநிலத்தில் ஒரு **சதுரஅடி** நிலம்கூட **சொந்தமாக வாங்கி வீடு** கட்டமுடியாது. பொதுவாக அங்குள்ளவர்கள் தங்களின் நிலத்தை மற்ற மாநிலத்தில் உள்ளவர்களுக்கு விற்கவும்மாட்டார்கள்.

**370வது** சட்டப்பிரிவுதான் காஷ்மீருக்குமட்டும் அளிக்கும் பிரதான சலுகை என்று அழைக்கிறார்கள். இது **காஷ்மீர் மாநிலத்துக்கு** மட்டும் கொடுக்கப்பட்ட **விசேஷ** சலுகையாகும். இது இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட காலங்களுக்கு முன்பு இருந்தே கடைபிடிக்கும் **சலுகையாகும். இந்தியா சுதந்திரம்** அடைந்த பிறகும் இவை தொடர்கிறது. இனியும் இந்த 370 பிரிவு தொடரவேண்டுமா? கூடாது! நாங்கள் ஆட்சிக்கு வந்தால் காஷ்மீருக்குமட்டும் கொடுக்கப்பட்ட இந்த 370 பிரிவை நீக்கப்போகிறோம் என்று BJP கூறியுள்ளார்கள். இது ஒரு விதத்தில் **நியாயமாகபட்டாலும்** இதை உடனே நீக்கினால் பக்கத்து நாடான **பாகிஸ்தான் நாட்டு** முஸ்லீம் மக்களுடன், காஷ்மீர் முஸ்லீம் மக்கள் இணைந்துவிடும் அபாயம் இதில் உண்டு. **காஷ்மீர்** தனிநாடாக்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்கலாம். இதற்கு உதவ **சீனா** நாடு தயாராக இருக்கிறது.

## புது பிரதமர்.திரு.மோடி அவர்கள் நல்ல நிர்வாகி:

திரு.மோடி அவர்கள் குஜாரத்தில் முதல்வராக மூன்றுமுறை வெற்றிகரமான ஆட்சி செய்ததற்கு முக்கிய காரணம், தன் குஜராத் ஆட்சி நிர்வாகத்தில் RSS,பஜ்ரங்தள்,BJP போன்ற இயக்கங்களில் உள்ள அரசியல்வாதிகளின் ஆலோசனைகள் எதையும் கேட்காமலும் நிர்வாக விஷயத்தில் தன் நெருங்கிய நண்பர்களான அரசியல்வாதிகளைகூட **நிர்வாகத்தில்** தலையிடாமல் அவர்களை ஒதுக்கியே வைத்திருந்தார். நல்ல அனுபவமுள்ள **உயர்படிப்பு படித்த உயர் அதிகாரிகளை** ஆலோசகர்களாக தெரிந்தெடுத்து அவர்கள் ஆலோசனையின்படி நிர்வாகத்தை நடத்தியதுதான் குஜராத் ஆட்சியின் வெற்றியாகும்.

திரு.**மோடி** அவர்கள் குஜராத் முதல்வராக இருந்தபோது திரு.தினேஷ்பிஸ்ட்,ஒப்பிரகாஷ்சிங், தான்மே உபாத்யாய,ஜெகதீஷ்தாக்கர்,சஞ்சய்பவ்சார்,அம்ருத்பாய்பட்டேல்,பரதலால்,ஜி.சி.முர்மு, கைலாஷ்நாதன்,விஜய்நெஹ்ரா,ஷர்மா,பிரஷாந்த்கிஷோர்,ஹிரேன்ஜோஷி இவர்கள்தான் குஜராத் நிர்வாகத்தில் திரு.மோடிக்கு ஆலோசனை அளிக்க ஒவ்வொரு துறைக்கும் நியமிக்கப்பட்ட மெத்த படித்த உயர் அதிகாரிகளாகும்.

' அன்றைய தமிழ்நாட்டு முதல்வர் தமிழ்நாட்டில் திரு.**அலெக்சண்டார்** அவர்களை **தலைமை செயலராக** நியமித்தபோது தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலங்களில் கோப்புகள் எதுவும் எந்த அதிகாரிகளும் 7 நாட்களுக்குமேல் தன்னிடம் வைக்காமல் உடனுக்குடன் பதில் எழுதி அனுப்பும் ஏற்பாடுகள் செய்ததின்மூலம், மக்கள் **லஞ்சம்** கொடுத்து பைல்களில் அதிகாரிகளின் கையொழுத்து வாங்கும்நிலை வராமல் அதன்மூலம் **தமிழக முதல்வருக்கு** நல்ல பெயர் கிடைத்தது.

' அரசியல் **கோமாளி** என்று வர்ணிக்கப்பட்ட முன்னாள் **ரயில்வே மந்திரியாக** இருந்த **லாலுபிரசாத் அவர்கள்** காலத்தில் நாடு சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்து நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த **ரயில்வே நிர்வாகத்தை** உலகமே கவனிக்கும் வண்ணம் **அதிக லாபத்தில்** ரயில்வேயை வெற்றிகரமாக இயங்கியது அதன் காரணம். குறிப்பிட்ட **உயர்அதிகாரிகளின்** ஆலோசனைகளை லல்லுபிரசாத் அவர்கள் அப்படியே நடப்பில் கொண்டுவந்தார். ரயில்வேயும் **பெரும் லாபத்தில்** இயங்கியது.

## பிரதமர்.மோடி அவர்களுக்கு நல் ஆலோசனை:

திரு.**மோடி** அவர்கள் குஜராத் முதல்வராக இருந்தபோது அந்த கொடூர மதகொலைகள் நடந்த அந்த **மூன்று நாட்களை** தவிர்த்து அவர் **முதல்வர் பதவிவிலகும்வரை RSS,பஜ்ரங்தள்** போன்ற **அரசியல்வாதிகளை** தனது நிர்வாகத்தில் குறுக்கிடாமல் பார்த்துக்கொண்டு செவ்வனே ஆட்சி நடத்தி அவர் **உலக புகழ்** பெற்றதுபோல் திரு.மோடி அவர்கள் ஆட்சியில் **இந்தியா மாறவேண்டும்** என்று பிரதமர் பதவியை மக்கள் மிக நம்பிக்கையுடன் திரு.மோடி கையில் ஒப்படைத்துள்ளார்கள். தான் டீ கடையிலிருந்து **உயரத்தில்** வந்ததை அவர் நினைத்து **பாரத தேசத்தில்** அடிப்படை வசதிகள் கிடைக்காத கிராம மக்களை குறிப்பாக **தலித்துகள்,ஆதிவாசிகள்,கிராமங்களில் வசிக்கும்** மக்களின் முன்னேற்றத்துக்கு **கல்வி,மருத்துவம்** ஆகியவைகள் கிடைக்க முன்னேற உதவி செய்யவேண்டும். நகர்புற நடுத்தர மக்களின் தேவைகளும் ஏராளம் உண்டு. **ஆதிவாசிகள்** குடியிருக்கும் காடுகளுக்கு **சாலை வசதி** செய்து கொடுத்து, பஸ் வசதிகளும் செய்து போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தினால் ஆதிவாசிகளின் பிள்ளைகள் உயர்கல்வி கற்க அதன் காரணமாக அங்கு ஆதிவாசிகளின் நிலை உயர மிக உதவியாக இருக்குமே! இந்த போக்குவரத்து சாலை வசதிகள் காடுகளுக்குள் உள்ள கிராம மக்களுக்கு கிடைத்துவிட்டால் **நாக்ஸ்லைட்டுகளுக்கு** அங்கு மக்கள் ஆதரவு தரமாட்டார்கள். அரசாங்கம் செய்யவேண்டிய உதவிகளை இப்போது நாக்ஸ்லைட்டுகள் மக்களுக்கு செய்து உதவுவதால் காட்டுவாசிகள் நாக்ஸ்லைட்டுகளை காட்டி கொடுக்க விருப்பப்படுவதில்லை. இதுதான் இப்போதுள்ள யதார்த்தம். இவைகளையெல்லாம் நிறைவேற்ற **பிரதமர்** ஏற்பாடு செய்யவேண்டும்.

**மத விஷயத்தில்** பிரதமர் தான்சார்ந்த **இந்துஇயக்கங்களை** கலந்தாலோசிக்காமல் இந்தியாவில் **மதசுதந்திரத்துக்கு** எல்லைபோடாமல் **தடைபோடாமல்** மக்கள் அவரவர் தெய்வங்களை ஆராதிக்க பூரணசுதந்திரம் அளிக்கவேண்டும். **இஸ்லாமியர்** மதமாற்றம் செய்தால் அதை யார் தடுத்தாலும் அவர்கள் மிகவும் கடுமையாக எதிர்ப்பார்கள். அதன் எதிர்விளைவுகளும் பயங்கரமாக இருக்கும். ஆனால் **கிறிஸ்தவர்களாகிய நாங்கள் யாரையும் மதம் மாற்றுவதில்லை.** மதத்தை **பரப்புவதுமில்லை.** காரணம், **கிறிஸ்தவம் ஒரு மதம்அல்ல.** அது **மார்க்கம்.** எங்கள் வேதம் **கிறிஸ்துவை அறிவிக்க** கட்டளையிட்டுள்ளது. நாங்கள் அதைத்தான் செய்கிறோம். அது எங்கள் **தெய்வத்தின் கட்டளை.** உலகத்தின் எந்த **நாட்டின் அரசாங்கமும்** அதை தடைசெய்யமுடியாது. அதை நாங்கள் **அறிவிப்பது** எங்கள் **கடமைகளில்** ஒன்றாகிறது.யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்து வதில்லை. அப்படி நாங்கள் இயேசுவை மற்றவர்களுக்கு **அறிவிக்கும்போது** அதை தடுத்தாலோ, **இயேசுவை** அறிவிக்கும் எங்களை **துன்புறுத்தினாலோ** பதிலுக்கு நாங்கள் யாரையும் **தாக்குவதில்லை.** நாங்கள் பதிலுக்குபதில் **தாக்கக்கூடாது** என்றுதான் எங்கள் வேதம் எங்களுக்கு **கட்டளையிட்டுள்ளது.** ஆகவே நாங்கள் **அன்பை அறிவிக்க,** சமாதானத்தை அறிவிக்க இதன்மூல காரணகர்த்தராகிய **இயேசுவின் நற்செய்தியை** அறிவிக்க திரு.**மோடியின்** அரசாங்கம் தடையேதும், உண்டாக்காமல் இருக்க இந்திய **பிரதமரான** நீங்கள்தான் எங்களுக்கு உதவவேண்டும். ஏற்கனவே கிறிஸ்தவ **டாக்டர்களை,மிஷனரிகளை,சிறுபிள்ளைகளையும்** சேர்த்து காரில் வைத்து உயிரோடு நெருப்பு வைத்து கொளுத்தி கொன்றது உங்களால் மறந்திருக்கமுடியாது. **சேவை மனப்பான்மை யுடன்** சொந்த ஊரைவிட்டு, சொந்த வாழ்க்கையை மறந்து சேவை செய்த **கன்னியாஸ்தீரிகளை** மானபங்கப்படுத்தி **கொலை செய்தது** குறித்து உலகமெ இந்தியாவிடம் கேள்விகேட்டதே! இப்படிப்பட்ட

செயல்கள் உங்கள் ஆட்சியில் நடக்காமல் பாரத்துக்கொள்ளுங்கள். உங்களையும், உங்கள் நிர்வாகத்தை இந்த விஷயத்தில் மிகவும் நாங்கள் நம்புகிறோம். உங்களோடு இருக்கும் இயக்கத்தினருக்கு இவ்விஷயத்தில் நீங்கள்தான் ஆலோசனை நல்கவேண்டும் என்று இந்த **ஜாமக்காரன்** பத்திரிக்கை மூலம் **அனைத்து வாசகர்கள்** சார்பிலும் உங்களுக்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கிறோம். எங்கள் இயேசு உங்களையும் நேசிக்கிறார்,உங்கள் ஆட்சியையும் ஆசீர்வதிப்பார்.

## கிறிஸ்தவர்களும்,ஜாமக்காரன் வாசகர்களும் இனி செய்யவேண்டியது:

இப்போது நாம் யாவரும் ஒரு **புதிய ஆட்சியின் கீழ்** வந்துள்ளோம். கிறிஸ்தவ வேதம் கூறுவது என்னவென்றால் **இந்தியாவை ஆளுகின்றவர்களுக்காக** அவர்களை ஆசீர்வதித்து ஜெபிக்க வேண்டியது நம் கடமையாகும். 1தீமோ 2:1,2. வசனங்களில் அப்படி எழுதியுள்ளது **ஆளுகின்றவர் களுக்காக,அதிகாரிகளுக்காக ஸ்தோத்திரத்தோடு வேண்டுதல் செய்யவேண்டுமாம்.** அப்படி செய்வதால் மட்டுமே நாமும் நம் தேசமும் **கலகமில்லாமல்,சமாதானத்துடன்** வாழ்க்கை நடத்தமுடியும் என்று எழுதப்பட்டுள்ளது.

**ஓட்டுப்போடுவது** ஒவ்வொரு இந்திய கிறிஸ்தவனின் **உரிமையாகும்**. நாம் யாருக்கு ஓட்டுபோடவேண்டும் என்பதும் ஒவ்வொரு கிறிஸ்தவ இந்தியனின் சொந்த **தனிப்பட்ட உரிமையாகும்.** தேர்தல் முடிந்து யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒருவேளை **உனக்கு பிரியமில்லாதவர்கள்** ஆட்சி பீடத்தில் அமர்ந்தாலும், **ஆளுகின்றவர்களுக்கு கீழ் அடங்கி வாழவேண்டும்** என்பதுதான் நம் வேதம் நமக்கு கட்டளையிட்டுள்ளது. காரணம் **நம் தெய்வமான** இயேசுகிறிஸ்துவுக்கு **தெரியாமல் யாரும் எந்த** பதவிக்கும் வரமுடியாது. அது **இந்திய தலைமையானாலும், திருச்சபையின் திருமண்டல தலைமை**(பிஷப்,மாடரேட்டர்)யானாலும் கர்த்தருக்கு தெரியாமல் அந்த பதவிக்கு யாரும் வரமுடியாது!. ஒருவேளை **தலைமை** மோசமானதாக இருந்தாலும், தலைமையில் உள்ளவர் நமக்கு **அநியாயம்** செய்பவர்களாக இருந்தாலும் அப்படிப்பட்டவர்களையும் நம் தேவன்தான் **அனுமதித்துள்ளார்** என்று நம் வேதம் கூறுகிறது. மோசமான **இந்திய தலைமையானாலும்,திருச்சபை பிஷப்,மாடரேட்டரானா லும்** இவர்களை **தேவன் தெரிந்தெடுக்கவில்லை.** ஆனால் இவர்கள் தேவனால் **அனுமதிக்கப்பட்ட வர்களாகிறார்கள்.**

' **நம்மை ஆள மோசமான தலைமையை கடவுள் அனுமதிப்பாரா?**ஆம். சில சமயம் நம்மை **திருத்தவும்**,நாம் தேவனிடத்தில் **நெருங்கி சேரவும்** மோசமான தலைமையை கர்த்தர் அனுமதிக்கிறார்.

**தேவன்** நேசித்த ஜனங்களாகிய **இஸ்ரவேலர்** எப்போது கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அவர் மனதை வேதனைப்படுத்துகிறார்களோ! உடனே கர்த்தர் தன் மக்களை சத்துருவான **பெலிஸ்தியர்** அல்லது அம்மோன் புத்திரர் அல்லது **பார்வோன்** ஆகியவர்களிடத்தில் **அடிமைகளாக** வாழ **கர்த்தரே தம் மக்களை ஒப்புக்கொடுப்பார்.** விசுவாசத்தை,நம்பிக்கையை பெலப்படுத்த ஆளுகின்ற **பார்வோன்** இருதயத்தைகூட கர்த்தரே மேலும்மேலும் **கடினப்படுத்தி** மக்களை கொடுமைப்படுத்த ஏற்பாடு செய்கிறார் என்று வேதம் கூறுகிறது.

இது **கர்த்தரின்** வித்தியாசமானவழி-நாம் மனந்திரும்பி கர்த்தருக்கு கீழ்படிய தொடங்கும்போது மனஉருக்கமுள்ள தேவன் நம்மை வேறு ஒரு **ஆட்சியின்கீழ்** அல்லது வேறு ஒரு **தலைமையின்கீழ்** வாழ ஏற்பாடு செய்கிறார்.

' அதனால்தான் எந்த மனுஷனும் மேலான **அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படியகடவன்.** ஏனென்றால் **தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை.** .... ஆதலால் அதிகாரத்துக்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்துக்கு எதிர்த்து நிற்கிறான்.... மேலும் அதிகாரிகள்(தலைமையில் உள்ளவர்கள்) **நற்கிரியைக்கல்ல, துர்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்...**

மேலும் உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் **தேவ ஊழியக்காரனா யிருக்கிறான்...** அவன் பட்டயத்தை விருதவாய் பிடித்திருக்கவில்லை. **அவன்.... தேவஊழியக் காரனாயிருக்கிறானே.ரோ15:1-14..**

இப்படிப்பட்ட தலைமைக்கு மனசாட்சியினிமித்தம்(அதிகாரங்களுக்கு) கீழ்ப்படிய வேண்டும். இதற்காகவே நீங்கள் **Tax,வரியையும்** கொடுக்கிறீர்கள். அவர்கள்.... தேவ ஊழியக்காரர்களாக யிருக்கிறார்களே என்று கிறிஸ்தவ வேதம் போதிக்கிறது.

இந்த வசனத்தில் **அரசாங்க** பொறுப்பில் உள்ளவர் நம் **வரிப்பணத்தில் சம்பளம்** வாங்குபவர்கள். உன்னை மோசமாக நடத்தினால் சோர்ந்துபோகதே? இவர்கள் யாவரும் **தேவனுடைய ஊழியக்காரர்கள்** என்று வேதம் அறிவிக்கிறது.

**சுவிசேஷம்** அறிவிக்கிறவர்கள்தான் **ஊழியக்காரர்கள்** என்று நாம் நினைக்கிறோம். மோசமான தலைவர்கள், அதிகாரிகள்கூட **தேவனால் அனுமதிக்கப்பட்ட தேவ ஊழியர்கள்** ஆகும்.

' கிறிஸ்தவ சபையில் ஒரு **ஆயர்(பாஸ்டர்)** இரட்சிக்கப்பட்ட அனுபவம் உள்ள உண்மையான ஊழியர் இருந்தார். அவர் சபையில் ஒரு பணக்கார குடும்பம் **அவர்கள் வீட்டின் பிள்ளைக்கு முறையற்ற, தவறான திருமண ஏற்பாட்டை** செய்ய ஆயர் கட்டாயப்படுத்தப்பட்டார். வேத வசனத்துக்கு **அரசாங்கத்துக்கும்** விரோதமான தவறான, **அந்த கள்ள திருமண** ஏற்பாட்டை இந்த குறிப்பிட்ட **ஆயர் கையெழுத்திட்டு** நடத்திதர கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்த தவறான திருமணத்தை நான் நடத்தமாட்டேன் என்றார்.

**டையோசிஸ்** நிர்வாக கமிட்டியின் கண்டிப்பான **சிபாரிசும்** இதில் கலந்திருக்கிறது. ஆனால் தேவனுக்கு பயந்த அந்த **நல்ல ஆயர்**(பாஸ்டர்) அதற்கு இணங்கவில்லை.

**பிஷப்** அவர்களும் இந்த தவறான திருமணத்தை நடத்திதர அந்த ஆயருக்கு கட்டளையிட்டார். **பிஷப்** அவர்களின் கட்டளையையும் அந்த சபை ஆயர்(பாஸ்டர்) நிராகரித்தார்.

இதன் காரணமாக ஒரே மாதத்தில் அந்த **ஆயர் இடமாற்றம்** செய்யப்பட்டார். அவர் மனைவி ஒரு **ஆசிரியை** அவரும் உடனே மிக தொலைவில்உள்ள பள்ளிக்கு **இடமாற்றம்** செய்யப்பட்டார். அவர்களின் **பிள்ளைகள் பள்ளி** வருடத்தின் இடைப்பட்ட **மாதங்களில்** புதிய பள்ளிக்கூடத்தில் **சேர்க்கவும்** முடியாமல் **ஆயர்** ஒரு இடம், **ஆயரின்** மனைவி மிக துாரத்தில் உள்ள ஊரில் இடமாற்றம், பிள்ளைகள் நிலை மிக பரிதாபம். **ஆயரும்** அவர் மனைவியான அந்த **ஆசிரியையும்** ஒரு மாதம் விடுப்பு(லீவ்) எடுத்து **கர்த்தரிடம் உபவாசித்து** ஜெபித்தார்கள். பிஷப்பிடம் கெஞ்சி பிரயோஜனமில்லை,டையோசிஸ் நிர்வாகிகளிடமும் **சிபாரிசுக்கு** போகவில்லை. பெரிய பணக்காரரின் விரோதத்தை சம்பாதிக்க **பிஷப்** விரும்பவில்லை. பெரிய தொகையாக பிஷப் கையில் திருமண குடும்பத்தினர் திணித்தனர். ஆகவே ஆயரை பிஷப்பே இடம்மாற்றம் உத்தரவு கொடுத்தார். ஆனால் ஆயர் குடும்பம் **கர்த்தரிடம் மட்டும் முறையிட்டார்கள். கர்த்தர் எழுந்தருளினார். கர்த்தர் சினம் கொண்டார்.** முதலில் கர்த்தரின் **கோபம் பிஷப்மேல்** வந்தது. அதன் காரணமாக பிஷப்புக்கு **ஸ்ட்ரோக்** வந்து **படுத்தபடுக்கையானார்.** இனி அவரால் **செயல்படமுடியாது** என்று **சினாட்** தீர்மானித்து அந்த பிஷப்புக்கு பதில் **பிஷப் கமிசரியை** தற்காலிகமாக **சினாட்** நியமித்தது.

**இரண்டாவது** கர்த்தர் ஆயரின் மனைவிக்காக **கல்வி அதிகாரி** மூலம் செயல்பட்டார். அந்த **ஆசிரியை** கல்விஅதிகாரியை நேரில் சந்திக்காமலே அதிகாரிகள் மூலம் செயல்பட்டார். இந்த இடமாற்றம் வருடத்தின் மத்தியில் **நவம்பர் மாதம்** ஏன் இந்த குறிப்பிட்ட ஆசிரியைக்கு கொடுக்கப் பட்டது என்று கிறிஸ்தவ பள்ளிகூட **நிர்வாகிகளிடம்** கேள்விகேட்டு ஒரு வாரத்தில் பதில் அளிக்கும்படியும், மேலும் ஒரு வாரத்துக்குள் அந்த ஆசிரியை பழைய இடத்துக்கே இடம்மாற்றம் செய்து எழுத்துமூலம் அதை அறிவிக்கவேண்டும் என்றும் கல்வி அலுவலகம் கட்டளையிட்டது. பிரச்சனை அரசாங்கத்தின் உயர்நிலை அதிகாரிகள்வரை சென்றது. கிறிஸதவ பள்ளியின் தலைவரான **பிஷப்புக்கு** இதன்மூலம் அரசாங்க தண்டனை அளிக்கும் என்பதை உணர்ந்து வேறு வழியில்லாமல் நிர்வாகமும், தற்காலிக **பிஷப் கமிஷரியும்** இணைந்துபேசி அந்த **ஆயரையும்,அந்த ஆசிரியையும்** பழைய இடத்துக்கே மாற்றம் செய்துவிட்டனர். அதன்பின் சுமார் 5 வருடம் ஆயர்(பாஸ்டர்) அவர் மனைவியான ஆசிரியையும் அதே இடத்தில் பணியாற்றினார்கள். எப்படியோ திருட்டு கல்யாணத்தை வேறு ஆயர் மூலமாக அந்த பணக்கார குடும்பம் நடத்தி முடித்துவிட்டார்கள்.

**இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால்:** இந்த ஆசிரியையோ,ஆயரோ (பாஸ்டர்) **நிர்வாகத்துக்கு** அல்லது தலைவரான **பிஷப்புக்கு** எதிராக **புகார்** ஏதும் கொடுக்காமலே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நிலைமைகள் மாறியது. முதலாவது கர்த்தர் **பிஷப்பை** அடித்து ஒரு இடத்தில் படுக்கவைத்து, **அரசாங்க அதிகாரிகளை ஆண்டவரே இயங்கவைத்து நியாயமில்லாத இந்த இடமாற்றத்தை** சரிப்படுத்தவைத்தார். எத்தனை **பெரிய அற்புதம்** இது!.

**நம் தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தவர். அவர் சர்வ அதிகாரம் பெற்றவர், தன் பிள்ளைகளுக்கு,மிஷனரிகளுக்கு,ஊழியர்களுக்கு யார் தீங்கு இழைக்க முயன்றாலும்** அது **அரசாங்கமானாலும்,பிரதமரானாலும்,பிஷப்பானாலும்** மேலே வாசித்த ஊழியக்காரர் குடும்பத்துக்கு செய்ததுபோல் கர்த்தர் **சத்தமில்லாமல்** தண்டனையை நிறைவேற்றி செயல்படுவார். **"உன்னை தொடுகிறவன் என் கண்மணியை தொடுகிறான்"** என்று கர்த்தர் கூறியிருக்கிறார்.

ஆகவே **ஆட்சிமாறினாலும்,அதிகாரம்மாறினாலும் உலகசட்டம் நம்மை துன்புறுத்தினாலும்,கிறிஸ்தவர்கள் பயப்படவேண்டாம். "யுத்தம் என்னுடையது!. நீங்கள் சும்மாயிருப்பீர்கள்"** என்று கர்த்தர் கூறினார். இஸ்லாமியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அவர்களே போராடுவார்கள். பதிலுக்கு பதில் அவர்களே செய்வார்கள். ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ **சேனைகளின் அதிபதியான நம் தேவன்** கிறிஸ்தவர்களுக்காக போராடுவார். பயம்வேண்டாம். புதிய இந்திய ஆட்சியின் பயம் கிறிஸ்தவர்களுக்கு வேண்டாம். **நம்முடைய தேவன் உயிருள்ளவர் சகலத்தையும்** கவனித்துக் கொண்டிருக்கிறார்.

**கர்த்தர் நம் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பின்வாசலில் நிற்க நாட்டுக்காக, பிரதமருக்காக ஜெபிக்க உண்மை கிறிஸ்தவர்களை கர்த்தர் தேடிக்கொண்டிருக்கிறார்.**எசே 22:30**.** நாம் செய்யவேண்டியது நம் புதிய பிரதமர்.திரு.**நரேந்திரமோடி** அவர்களுக்காக ஜெபிப்போம். RSS, பஜ்ரங்தள் தலைவர்களுக்காக ஜெபிப்போம். இயேசு அவர்களுக்காகவும் இரத்தம் சிந்தியுள்ளார். அவர்களை இயேசு நேசிக்கிறார். வாசகர்கள் யாவரும் தினசரி ஜெபிப்போம். **பாரதம் இயேசுவை** அறியவேண்டும். பிரதமர் **இயேசுவை அறியவேண்டும்.** ஜெபிப்போம் கர்த்தர் நம் தேசத்தை ஆசீர்வதிப்பராக. **"வாழ்க பாரதம்".**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## நல்ல அறிவிப்பு:

ஜாமக்காரன் பத்திரிக்கை இப்போது PDF முறையிலும் மின்னஞ்சல் இ-மெயில் வழியாகவும் அனுப்பப்படுகிறது. ஜாமக்ாரனை உங்கள் கம்பியூட்டர் வழியாக டவுன்லோட் செய்து புத்தக வடிவில் அப்படியே வீட்டில் உள்ள அத்தனை பேர்களும் வாசித்து பயன்பெறலாம். ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரன் டவுன்லோட் செய்ய வேண்டுமானால் **உங்கள் இ-மெயில் ஐடியை** எங்களுக்கு jamakaran@yahoo.com என்ற இ-மெயில் முகவரிக்கு அனுப்பி வைத்தால் ஜாமக்காரன் தயார் செய்து அச்சகத்துக்கு போகும்முன்பே அதை உங்கள் இ-மெயில் ஐடிக்கு நாங்கள் அனுப்பிவிடுவோம்.

மற்றவர்களுக்கு தபால் வழியாக பத்திரிக்கை கிடைக்கும்முன் நீங்கள் இந்தியாவிலோ, எந்த நாட்டில் இருந்தாலும் அல்லது எங்கிருந்தாலும் அந்த மாத ஜாமக்காரன் செய்தியை படித்து பயன்பெறலாம்.

### ஸ்டாம்புக்கள் இனி அனுப்பவேண்டாம்:

கடந்த சில மாதங்களாக இந்தியா எங்கும் ஸ்டாம்புகள் கிடைக்காமல் இருந்தது. அதனால் ஜாமக்காரன் அனுப்புவதிலும் தடை இருந்ததை ஜாமக்காரனில் அறிவித்தேன். உடனே ஏராளமானவர்கள் அவரவர்கள் ஊர்களில் உள்ள போஸ்ட் ஆபீஸிலிருந்து எவ்வளவு ஸ்டாம்ப் கிடைக்கிறதோ அவைகளை வாங்கி எனக்கு அனுப்பி உதவினார்கள். அவர்கள் யாவருக்கும் ஜாமக்காரன் சார்பில் நன்றி அறிவிக்கிறேன்.

இப்போது **சேலத்திலேயே** ஸ்டாம்புகள் கிடைக்க ஆரம்பித்துவிட்டது. ஆகவே இனி வாசகர்கள் சிரமப்படவேண்டாம். ஸ்டாம்புகள் வாங்கி என்கு அனுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அன்புக்கும்- உதவிகளுக்கும் மறுபடியும் நன்றி கூறுகிறேன்.

# அறியாது போனேனே!

# (I NEVER KNEW)

- Selected

**(ஒருவன் தன் மனைவி இறந்தபின்பு எழுதிய கவிதை)**
**(மனைவியை பல விஷயத்தில் அலட்சியப்படுத்தி அவள் மனதை வேதனைப்படுத்துபவர்களுக்காக இது வெளியிடப்படுகிறது)**

*அவள் என்மீது காட்டிய கரிசனையை அறியாது போனேனே!*
*அவள் என்மீது எவ்வளவு பொறுமையாய் இருந்திருக்கவேண்டும்*
*அவள் என்னைவிட்டுச் செல்லும்வரை உணராது போனேனே!*
*அவள் நாள் தவறாமல் எனக்குச் செய்த உதவி எத்தனை எத்தனை*
*அத்தனை செய்த அவளை சற்றே சிந்தித்திட அறியாது போனேனே!*
*ஆ...... இன்று அவள் மரித்துவிட்டாள் இனி சிந்தித்துப் பயனேது!*
*அவள் சுமந்த சிலுவை ஏராளம், ஆகிலும் புன்சிரித்தாள்,*
*அவள் துக்கங்களை தன் இதய நாணில் வைத்தே மீட்டுவிட்டாள்*
*ஆ..... இதயமில்லா பாவி நான், இதை அன்றே அறியாது போனேனே!*
*அவளிடம் கண்டதோ பூத்த புன்னகை, சுடர்வீசும் மகிழ்ச்சியே!*
*அதுகண்டு "அவளுக்கென்ன குறை" என்றல்லவோ இருந்துவிட்டேன்*
*"அன்று" உதவிக்கரம் நீட்டிட அந்தோ அறியாது போனேனே!*

*இவள் ஏன் அலட்டிக்கொள்கிறாள் என அன்று எண்ணினேன்!*
*இன்றோ அவளை பல துக்கங்கள் சூழ்ந்திருந்ததைக் காண்கிறேன்!*
*இன்னலில் உழன்ற அவள் துக்கத்தை அன்றே நான் அறிந்திருந்தால்*
*இனிதே நன்மைகள் பல நான் செய்திருக்கக்கூடுமே!, ஆனால்....*
*இனித்த புன்னகையால் இன்னல் எனக்கு மறைத்துவிட்டாளே!*
*இனி நான் என்ன செய்வேன் கனிமரமாய் தவிக்கிறேன்!*
*இனிய அவள் என் வாழ்விற்கு சுமை தாங்கியாய் நின்றதை*
*இளைத்தே என்னைவிட்டு மறையும்வரை அறியாது போனேனே!*
*இங்கிதம்,பொறுமை,முகமலர்ச்சி... அடடா எத்தனை எத்தனை!*
*இத்தனை நற்குணங்களால் என் வாழ்வை செழித்திட வைத்தாளே!*
*இக்கானக பயணத்தைத் தன் சிறுசிறு செயல்களால்... எனக்கு*
*கனிவாக்கித் தந்தாளே பாதகன் நான்... அறியாது போனேனே!*

' 2003 ஆகஸ்ட் மாத ஜாமக்காரனில் மனைவியை இழந்த கணவர் ஒருவர் புலம்பலாய் கவிதை எழுதியிருந்தார். அதைத்தான் நீங்கள் மேலே வாசித்தீர்கள்.

பலர் தன் மனைவி **உயிரோடு இருக்கும்போது** அவளை அலட்சியப்படுத்தி மனதில் ரண வேதனை உண்டாக்கி, மற்றவர்முன் உறவினரின்முன் மனைவியை அவமானப்படுத்தி மனைவியை

ஒரு வேலைக்காரியைப்போல் நடத்திய கணவன்மார்கள் நிறையபேர் உண்டு. சிலர் தினம் குடித்து விட்டு வீட்டுக்குவந்து மனைவியை துன்புறுத்துவோரும் உண்டு. சில வீடுகளில் கணவன்மார் வேலைக்குபோகாமல் மதுபானம் குடித்து மனைவி கஷ்டப்பட்டு சம்பாத்திக்கும் பணத்தில் நன்றாக சாப்பிட்டு மனைவியை அடிமைப்போல் நடத்தியவர்கள் உண்டு. சில கணவன்மார்கள் மனைவி பிள்ளைகள் வீட்டில் இருக்க வேறு ஒரு பெண்ணோடும் குடும்பம் நடத்தி தன் சம்பாத்தியத்ததை இரண்டாம் மனைவிக்கு கொடுத்து அவளிடம் சுகம் அனுபவித்து, தாலி கட்டிய மனைவியையும், பிள்ளைகளையும் கவனிக்காமல் பெற்ற பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கை கேள்விக்குறியாக்கிவிட்டவர் உண்டு. இப்படிப்பட்டவர்கள் ஒரு நாள் மனைவி மரித்தவுடன் மனைவிக்கு செய்த துரோகத்தை காலமெல்லாம் நினைத்து கதறி கதறி அழும் கணவன்மார் உண்டு.

கணவன் மரித்து மனைவியால் துக்கத்தை மறந்து வாழ முடியும். ஆனால் மனைவி மரித்துபோனவுடன் கணவனால் நிம்மதியாக வாழமுடியாது. மனைவி மரித்தபின் சில கணவன்மார் நொடிந்துபோய் மனவேதனையோடு இப்போதும் வாழ்கிறார்கள். மனைவி மரித்தபின்தான் பலருக்கு **மனைவியின் அருமை** புரிகிறது. ஆகவே மனைவி உயிரோடு இருக்கும்போத உங்கள் குடும்ப வாழ்க்கையை இன்பமானதாக்கி மனைவியை சந்தோஷத்துடன் வாழவையுங்கள். சிலர் வாழ்க்கையில் மனைவி மரித்தால்போதும் முழுகுடும்பமும் நிம்மதியாய்,சந்தோஷமாய்,சமாதானமாய் வாழமுடியும் என்று நினைக்கும் நிலையில் சில மனைவிமாரின் சுபாவம் அமைந்திருக்கும். அப்படிப்பட்டவர் குடும்பத்தில் மனைவி இல்லாமல்இருந்தாலேபோதும் என்று நினைக்குமளவு சில மனைவிகள் **கொடூரமானவர் களாய்,**கணவனுக்கும் குடும்பத்துக்கும் தலைவலியாய் இருக்கும் மனைவிமார்களும் உண்டு. அப்படிப்பட்ட மனைவியின் மோசமான சுபவாத்துக்கு அவளின் பெற்றோர் வளர்ப்பு சரியில்லாததே பிரச்சனைக்கெல்லாம் காரணமாகும். குணசாலியான பெண் வீட்டை கட்டுகிறாள். அப்படிப்பட்ட பெண் மனைவியாய் கிடைப்பது பாக்கியமே. எனவே உயிரோடிருக்கும்போதே மனைவியை நேசியுங்கள். திருமணமாகதவர்கள் **குணசாலியான மனைவி** கிடைக்க ஜெபியுங்கள்.

**குறிப்பு: கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்டதை வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இந்த ஜாமக்காரனிலும் கீழ்காணும் கட்டுரையை வெளியிடுகிறேன்.**

# உங்கள் மனைவிக்காக ஜெபிப்பது எப்படி?

**கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களே புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.**(ஏசா 40:31).

உங்கள் மனைவியை நீங்கள் கரம்பிடித்த நாளிலிருந்து அவளுக்காக ஜெபிக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு தெரியுமா?.

ஆணுக்கு, பெண் திருமண உறவுக்குள் துணையாக இருக்கவேண்டுமென்பது தேவனுடைய அநாதி சித்தமும்,தீர்மானமும் என்பதை நீங்கள் உணர்ந்துக்கொள்ளவேண்டும். திருமணம் தேவனுடைய திட்டம்.ஆதி 2:18 வசனத்திலே "பின்பு **தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமை யாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்"** என்றார் என்று சொல்ல காண்கிறோம். திருமண வயதை அடைந்த ஒவ்வொரு ஆணுக்கும்-பெண்ணுக்கும் ஏற்ற துணை உண்டாயிருக்கவேண்டும் என்பது தேவன் ஆதியிலே, ஏதேன் தோட்டத்திலே திருவுளம் பற்றினது.

உங்கள் **மனைவி** என்னும் ஸ்திரீயை நீங்கள் தானாகவே கண்டுபிடித்து உங்கள் துணையாக ஏற்படுத்தியிருந்தாலும், அல்லது உங்கள் பெற்றோரும், உறவினர்களும் உங்களுக்காக அவளை

சம்பந்தம் பண்ணி வைத்திருந்தாலும் சரி, திருமணம் என்ற திட்டத்தின்கீழ் நீங்களும் கணவனும், மனைவியுமாக வந்திருந்தால், அவருக்காக நீங்களும்,உங்களுக்காக அவரும் ஜெபிக்கவேண்டும். அதுவே உங்களைக் குறித்தும், உங்கள் திருமணத்தை குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் தேவனுக்குள்ள முதல் எதிர்ப்பார்ப்பு.

ஒரு குடும்பம் சீர்குலைந்துபோனால், அதன் காரணத்தை தேவன் மனிதனிடமே(அதாவது ஆணிடமே) முதலில் விசாரிப்பார் என்று நாம் நினைக்க வேதத்தில் காரணமுண்டு. ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்த விருட்சத்தின் கனியை மனிதனும், அவன் மனைவியும் புசித்ததை அறிந்த தேவன் ஆதாமைத் தேடினார் என்று வாசிக்கிறோம். ஆதி 3:9. "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார். இந்த வசனத்தை வாசிக்கும்போது 2 கேள்விகள் நம் மனதில் எழலாம்.

**முதல் கேள்வி:** ஆதாமையும், ஏதேன் தோட்டத்தையும் படைத்த தேவனுக்கு ஆதாம் எங்கே இருக்கிறான் என்று தெரியாதா?தெரியும். ஆனால் அவர் கேள்வியின் சாரம் இதுவே" ஆதாமே நீ என்னோடு கொண்டஉறவில் இப்பொழுது எங்கே இருக்கிறாய்? நீ புசிக்கவும்,தொடவும்கூடாது என்று சொன்ன கனியைபுசித்து பாவஞ்செய்ததானல் என்னைவிட்டு,என் கட்டளையைமீறி என் பிரசன்னத்தை விட்டு தூாரம் சென்ற ஆதாமே,இப்பொழுதும் நீ எங்கே இருக்கின்றாய் என்பது உனக்கு தெரியுமா?.

**2வது கேள்வி:** தேவன் **ஏன் பாவம்** செய்த ஸ்திரீயிடம் விளக்கம் கேட்கவில்லை? இதற்கு காரணம் என்ன என்று வேதம் தெளிவாகச் சொல்லவில்லையென்றாலும், வேத வல்லுநர்கள் சொல்லும் கூற்று இதுவே. ஆண்டவர் தம் கட்டளையை மனுஷனுக்குத் தான் கொடுத்தார். அவனிடமிருந்துதான் ஏவாள் அந்த கட்டளையை அறிந்திருக்கவேண்டும். அப்படியிருக்க தாம் யாரிடம் பொறுப்பைக் கொடுத்தாரோ,அவனிடமே அதைக்குறித்து விசாரிப்பதுதான் நீதிபரரான தேவனுடைய சுபாவம்.

இதை வாசிக்கும் எனக்கு அருமையான சகோதரரே, குடும்பம் என்ற பொறுப்பையும் தேவன் உங்களிடம் உங்களை நம்பியே தந்துள்ளார் என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் உங்கள் மனைவியை கரம்பிடித்து ஆறு மாதங்களோ, ஆறு வருடங்களோ, அறுபது வருடங்களோ எவ்வளவு காலம் ஆகியிருந்தாலும் குடும்பத்தலைவர் என்ற அந்தஸ்து அரசாங்கம் தரும் ரேஷன் கார்டில் மட்டுமல்ல, ஆண்டவர் பார்வையிலும் உங்களுக்குத்தான்.

உங்கள் மனைவிக்காக தினமும் சிறிது நேரம் எடுத்து கீழ்கண்டவாறு ஜெபிப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**என் ஆண்டவரே,**

❖ நீர் நினைக்கும் வண்ணம் நல்ல **கணவனாக** என்னை மாற்றுமையா, நீர் எனக்கு தந்த அந்த பெரிய பொறுப்பை அலட்சியப்படுத்தவோ, கவனக்குறைவாக கையாளவோ என்னை அனுமதிக்காதீர்.

❖ என் **மனைவியின் தேவைகள்** என்ன என்று புரிந்துக்கொள்ளவும், அவள் ஆசைகள், எதிர்ப்பார்ப்புகள் என்ன என்பதை விளங்கிக்கொள்ளவும் அவள் சொல்வதைக் கவனமாக கேட்கவும், வேண்டிய கிருபையைத்தாருமையா.

❖ அவள் எனக்கு தரும் **ஆலோசனைகளை** உம்முடைய சித்தத்தின்படி உள்ளனவா என்பதை விளங்கிக்கொள்ள வசனத்தின் வெளிச்சத்தை தாரும். தேவனே, என் சுய விருப்பு-வெறுப்புகளைவிட என் எலும்பிலும் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கும் என் மனைவியின் விருப்பு-வெறுப்புகளை மேலாகக் கருத வேண்டிய கிருபையைத்தாரும்.

❖ என் பேச்சிலும், சுபாவத்திலும் அவளை பாதிக்கும் காரியங்கள் என்ன என்பதை அறிந்து அவற்றை அப்புறப்படுத்த உதவும்.

❖ கிறிஸ்து தமது **சரீரமான சபையை நேசிப்பதைப்போல என் மனைவியை நேசிக்க,** தன்னலமற்ற, தியாக பூர்வமான அன்பை அவளிடம் செலுத்த எனக்குள் உம்முடைய அன்பை ஊற்றும்.

❖ நான் இதுவரை அவளை நடத்திய விதங்களைக் குறித்து நான் வெட்கப்படுகிறேன். மனஸ்தாப்படுகிறேன். இனிமுதல் அவளை கனம் பண்ணவும் அவள்மேல் அன்பு பாராட்டவும் பரிசுத்த ஆவியானவர் உதவியை நான் நாடுகிறேன். ஆண்டவரே.

❖ அவள் **என்னைவிட சரீர பலம் குறைந்தவள் என்பதை உணர்ந்து** அவளால் செய்ய முடியாததை நான் செய்யவும், அவள் செய்யக்கூடியவைகளை இன்னும் சிறப்பாகச் செய்ய ஊக்கமளிக்கவும் எனக்கு உதவும்.

❖ அவள் **சரீரத்தில் சோர்வடையும்போது,** அவளை விசாரிக்கவும்,உதவவும்,ஆவியிலே, சோர்வுறும்போது அவளோடு சேர்ந்து ஜெபிக்கவும், அவளுக்காக நான் தனியே ஜெபிக்கவும்,நேரத்தை ஒதுக்கச் செய்யும்.

❖ நான் அவளை நடத்தும் விதத்தைக்கண்டு **என் பிள்ளைகளும், உற்றார்-உறவினர்களும் அவளை கனம்பண்ணவும், சுயமரிதையோடு** நடத்தவும் செய்யட்டும்.

❖ என் பிள்ளைகள் நடக்கவேண்டிய வழியிலே அவர்களை நடத்தி,அவர்கள் ஒருபோதும் அவளுக்கு விசனத்தைத்தராதபடி அவர்களைப் பழக்கவும் எனக்கு உதவும்.

❖ **உயர்விலும்,தாழ்விலும்,செழிப்பிலும்,வறுமையிலும்,ஆரோக்கியத்திலும், வியாதியிலும் நான் அவளோடு இருக்கவும்,அவளோடு சேர்ந்து உமது நாமத்தை உயர்த்தவும், உம்மைத் தொழுது கொள்ளவும் செய்யும்.**

❖ **என் மனவை நீர் எனக்கு தந்த ஏற்ற துணை** என்பதை நான் எப்போதும் உணர்ந்து செயல்படவும் உம்மை துதிக்கவும் செய்யும். **என் கண்கள் இச்சையோடு பிற ஸ்தீரிகளை** காணாதபடி என் கண்களையும், மனதையும் காத்துக்கொள்ளும். என்னையும் தம் சொந்த சரீரமாக எண்ணும் இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கிறேன். பிதாவே ஆமென்.

நீங்கள் இப்படி உண்மையாகவும்,ஆத்மார்த்தமாகவும் ஜெபித்திருந்தால், தேவன் தம்முடைய **பரிசுத்த ஆவியானவர்** மூலமாக உங்களை மேன்மை பொருந்திய மனிதனாகவும், நல்ல **கணவராகவும்,** உங்கள் பிள்ளைகளுக்கு **நல்ல தகப்பனாகவும்** மாற்றுவார். உங்கள் குடும்பம் கிறிஸ்து இயேசுவில் கட்டப்பட்டிருக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களை சுதந்திரித்துக்கொள்ளவும், **உங்கள் மனைவி வீட்டோறும் கனிதரும் திராட்சை செடிபோல** இருக்க நான் வாழ்த்துகிறேன்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# என் வெளிநாட்டு ஊழியங்கள்:


**ஆஸ்ட்ரேலியா,வியட்நாம் மற்றும் கம்போடியா** நாடுகளிலிருந்து ஊழிய அழைப்புகள் கடந்த வருடமே எனக்கு வந்தது.

ஆனால் இந்தியாவில் என் ஊழியம் அதிகம். என்னுடைய வாசகர்களுக்கு எழுதி அறிவிக்க வேண்டிய விஷயங்கள் ஏராளம். அதையெல்லாம் மனத்திற்குள் அடக்கிவைத்துள்ளேன். எழுத எனக்கு நேரம் வேண்டும். நேரம் கிடைப்பதில்லை.

ஆகவே, இந்த வருடம் முழுவதும் எந்த வெளிநாடுகளுக்கும் தேதிகள் கொடுக்கவில்லை. ஒருவேளை கர்த்தருக்கு சித்தமானல் 2015ம் வருடம் வெளிநாட்டு ஊழியத்துக்கு தேதிகள் ஒருமித்து ஒதுக்க இயலுமானால் அதை ஜாமக்காரன் வழியாக அறிவிப்பேன்.

மேலே குறிப்பிட்ட நாடுகளில் நான் சந்திக்காத நபர்கள், உங்களுக்கு தெரிந்தவர்கள், உறவினர்கள் இருந்தால் எனக்கு அவர்கள் விலாசத்தையும், தொலைபேசி எண்ணையும் தெரிவியுங்கள். அவர்களுக்கு என் கூட்டம் நடக்கும் இடம் மற்ற விவரங்களையும் அறிவிப்பேன்.

**- ஜாமக்காரன்**



## பிரபல AOG சபை ஊழியர் பால் யாங்கி சோ அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்:

உலகில் மிகப்பெரிய சபை என்று பெயர் பெற்ற, சுமார் **16 லட்சம் அங்கத்தினர்கள்** அடங்கிய மிக பிரம்மாண்டமான சபையை நடத்தும் ஊழியர்.**பால்யாங்கிசோ** அவர்களும், அவர் **மகனும்** சபை காணிக்கை **பணத்தை** கோடிகோடியாக வியாபாரத்தில் விரயம் செய்தனர். **ரியல் எஸ்டேட்** வியாபாரம்செய்து சபை விசுவாசிகளை அதில் பங்குதாரராகஆக்க அவர்களை கட்டாயப்படுத்தி பணம் செலுத்தவைத்து அதை அவர்களுக்கு திருப்பிகொடுக்காமல் மோசடி செய்ததாக சபை மக்களே போலீஸ்ஸில் புகார் அளித்ததாலும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாலும் **கொரியாதேச நீதிமன்றம்** இருவருக்கும் **சிறை தண்டனை** அளித்தது. பல வருடங்களுக்கு முன்பே **பால் யாங்கி சோ** உபதேசத்தில் வழிவிலகிப்போனர் என்பதையும் அதன் விவரத்தையும் ஜாமக்காரனில் பக்கம்பக்கமாக எழுதினேன். அன்று பெந்தேகோஸ்தே சபைமக்கள் வழக்கம்போல் குற்றம் சுமத்தும் ஆவியில் நான் அதை எழுதினேன் என்றார்கள்.



சகோ. **சாம் ஜெபத்துரை, மோகன். சி.லாசரஸ், பால்யாங்கிசோவை** பின்பற்றுகிறவர்கள் என்பதை அவர்கள் பத்திரிக்கை வாயிலாக நீங்கள் அறிவீர்கள். **ஜெபமலை**,3 நாள் உபவாசம்,12மணிநேரம் ஜெபம் இவைகள் யாவும் கொரியாவில் **பால்யாங்கிசோ** சபையில் பின்பற்றுவதாகும். கொரியாவில் உள்ள **ஜெபமலையின்** காப்பிதான் சகோ.மோகன் சி.லாசரஸ் கட்டியுள்ள ஜெபமலையாகும். அவரை புகழ்த்தி எழுதிய புத்தகமும் இவர்களுடைய கூட்டங்களில் விற்பனை செய்தார்கள். இப்போதும் அவர்கள் பத்திரிக்கைகளில் அதன் விளம்பரத்தை பார்க்கலாம்.

**சகோ.பால் யாங்கிசோ தன்பெயரை ஏன் மாற்றிக்கொண்டார் என்ற விபரமும் <u>இயலுமனால் இவர்களின் மற்ற முழுவிவரமும் அடுத்த ஜாமக்காரனில் வெளிவரும்:</u>**


### கிறிஸ்தவ சிறுபிள்ளைகள் ஜாக்கிறதை:

மே மாதம் வியாழக்கிழமை **சத்தியம்** தொலைகாட்சியில் சகோ.**மோகன். சி.லாசரஸ்** செய்திக்கு முன் 3வயதிலிருந்து 6வயதுக்குள்ள சிறு பிள்ளைகளை வானத்திலிருந்து **தேவதூதன்** இறங்கி வந்து **பெற்றோர் அறியாது** அந்த பிள்ளைகளை **பரலோகத்துக்கு** அழைத்து சென்று **இரண்டு நாட்கள் கழித்து** பூமியில் இறக்கிவிடுகிறார்கள். உடனே அந்த பிள்ளைகள் தீர்க்கதரிசனமும் உரைக்கிறார்கள் என்று காட்டப்பட்டது. ஆரம்பத்தில் பிள்ளைகள் காணாமல்போனதைக்குறித்து பெற்றோர் பதறிபோனார்களாம், பிறகு அவர்களை **தூதர்கள் பரலோகம் அழைத்துபோன** விவரம் அறிந்தபின், இப்போது பிள்ளைகள் 3நாட்கள் வீட்டுக்கு வராமல் இருந்தாலும், காணாமல்போனாலும் பெற்றோர் கவலைப்படுவதில்லையாம். அவர்கள் தங்கள் பிள்ளைகள் **பரலோகம்** போயிருப்பதை அந்த பெற்றோர்கள் விளங்கிக்கொண்டதால் கவலைபடுவதில்லையாம். எப்படியும் **தூதர்கள்** பிள்ளைகளை திருப்பிகொண்டுவந்து விட்டுவிடுவார்கள் என்று தைரியமாக இருக்கிறார்கள். இதே **அம்புலிமாமா** கதையைத்தான் **வின்செண்ட்செல்வகுமாரும்,சாது சுந்தர்செல்வராஜ்** அவர்களும்,**ஏஞ்சல் TVயில்** விரிவாக தினசரி கதைகதையாக பரலோக நாடகத்தைகாட்டி பெற்றோர்களின் சாட்சியுடன் TVயில் கூறி,கிறிஸ்தவ மக்களை குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

# வான்மலர் மாத இதழில் வெளிவந்த கவிதை

## இகழ்வுகளை தாங்கும் ஓர் இமயம்

### அறிவர், டாக்டர் G.புஷ்பராஜ்



அம்மை நோயும் ஆகாத வாயும்
காற்றினில் மறைந்து
களமது நிறையும். குறித்த
காலத்தில் மறையும்

இயலாமை கோடுகள் இகழ்வு தூரிகை
திரைமறை வரைவுகள்
ஞாலமதில் நிறையும் - இறை
ஞானமதில் மறையும்

தாக்கி எழுதுகிறார் என்றே
திறவா புத்தகத்தின்
முகத்துவாரத்தில் கண் மூடுகிறாள்
தீக் கோழியாய்

எளியவன் உனர எளி ''தாக்கி''
அறிமடம் களைய அறி ''தாக்கி''
உயிர்த்த கடவுளுக்கு உரித் ''தாக்கி''
குறை பார்வைக்கு நிறை ''தாக்கி''
நிறை பார்வைக்கு குறை ''தாக்கி''
தீரா வியாதிக்கு மருந் ''தாக்கி''
தீரும் பசிக்கு விருந் ''தாக்கி''

கிணற்றுக்குள் கீச் கீச் சத்தங்கள்
தாக்கி எழுதும் சரித்திரம் அறியா
தரித்திர தவளைகள்

அரியும் பரியும் குறு நரியும்
இறை கூடாரத்தில் - இருப்பதோ
ஓர் மனிதன் நம் காலத்து ஞாணி
நாளும் போராட்டத்தில்

பழுதினை பழுதென
பகல் பொழுதின் பொருளென
பழுதிலா மொழி கேட்டும்
பழுதென பல்லினில்
சொல் கொட்டாதீர்

களவுப் பொருட்கள்
கண்ணெதிரே
கணைதொடுக்க - கைவரும்
காலணா காணிக்கையும்
கைவிலக
பிடி உணவு தேறுமோ
அடிவயிறு காயுமே
ஓர் கவளம் சோற்றுக்கு
ஓராயிரம் உண்மைகள்
மறைப்பார் உலகில்

அன்னமும் ஆஸ்தியும்
துச்சம்மென்பான்
போலிதுகில் களைவான்
நிறை முகம் காணா
தமிழ் முகமே

வாழ்த்துவதற்கு
வாயினுள் நாவு அடங்காது
வசை பாடவும்
வாயினுள் நாவு மடங்காது
இருக்கட்டும்.

# வாசகர் கடிதம்

**கடிதம் 1 :** ஜாமக்காரன் மூலம் நாங்கள் குடும்பமாக சரியான வேத வசன உபதேசத்தில் நடக்க மிக உதவியாக இருந்தது. உங்களுக்கும் உங்கள் ஜாமக்காரனுக்கும் நன்றி.

2003ம் ஆண்டுவரை நான் கிறிஸ்தவ ஜீவியத்துக்கு முற்றிலும் தொடர்பில்லாதவனாக இருந்தேன். அப்போது ஒரு பெந்தேகோஸ்தே பாஸ்டரின் அறிமுகம் கிடைத்தது. அவரோடு இணைந்து பெர்க்மான்ஸ் பாடல்களை உற்சாகமாக பாடுவதும், அந்நியபாஷை பேசுவதும் தீர்க்கதரிசனம் உரைப்பதும், தலைமேல் கை வைத்தல், கைகளைதட்டிக்கொண்டே கீழே விழுவதும், தரையில் விழுந்து புரளுவதுமாக இருந்தேன். பார்ப்பவர்கள் ஆவியானவர் மிக வல்லமையாக என்மேல் இருக்கிறார் என்று பலர் நினைத்தார்கள். ஆனால் அதே சமயம் மனந்திரும்புதல், இரட்சிப்பு என்றால் என்ன என்றே எனக்கு தெரியாதவனாக இருந்தேன்.

உங்கள் ஆலோசனையின்படி நான் (LEF) Laymens Evangelical Fellowship சபைக்கு சென்றேன். இங்கு நான் போகும் சபையில் போதகரின் சாட்சியும், செய்தியும், தாழ்மையும், அவர் கடிந்துகொள்ளுதலும், என்னையும் என் குடும்பத்தையும் தலைகீழாக மாற்றின. இப்போது நான் வசனத்தில் வளருகிற மனசமாதானமுள்ள சாட்சியுள்ள குடும்ப வாழ்க்கை வாழ்கிறேன்.

குன்னூர், ஊட்டி.

**கடிதம் 2 :** ஜாமக்காரன் வெப் சைட்டில் நீங்கள் எழுதுவதை இந்துசமய ஆதரவு மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பு வெப்சைட்களில் எடுத்து தவறாக பயன்படுத்துகின்றனர். இதை தடுக்க ஏதும் வழிஇருந்தால் செய்யுங்கள். - இ-மெயில்

**ஜாமக்காரன்:** அறிவேன்! அவர்கள் ஜாமக்காரன் வெப் சைட்டிலிருந்து எடுத்து எழுதுவதை தடுக்க இயலாது.

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம்** வரை மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.**

ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும்.

தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம்.

(**தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஓய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

' வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையில்** வீட்டில் இருக்கமாட்டென் என்பதையும் அறியவும்.

# CIGM CHURCH - BHAVANI SAGAR (ERODE. Dt) CONVENTION



ஈரோடு மாவட்டத்தில் பவானி சாகர் என்ற இடத்தில் உள்ள CIGM சபையினர் நடத்தின ஆவிக்குரிய கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தது. அந்தியூர், கோபி, ஈரோடு ஆகிய ஊர்களிலிருந்து மக்கள் கூட்டங்களில் கலந்துக்கொண்டனர். Rev.மனேசன் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை ஜெப ஆயத்ததுடன் செய்திருந்தார். ஆண்டவர் நாமம் மகிமைப்பட்டது.

# SOUTH KERALA CSI DIOCESE DISTRICT CONVENTION (PEYAD)



தெற்கு கேரளா CSI டையோசிஸ்ஸை சேர்ந்த பேயாடு என்ற ஊரில் பல CSI சபைகள் சேர்ந்து நடத்தும் மாநில கன்வென்ஷன் வெகு சிறப்பாக நடந்தேறியது. முன்னாள் CSI மாடரேட்டரும், தெற்கு கேரள பிஷப்புமாக பணியாற்றிய Most Rev.கிளாக்ஸ்டன் பிஷப் அவர்கள் தலைமை தாங்கி எல்லா கூட்டங்களையும் சிறப்பித்தார். அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து CSI சபை ஆயர்களும், (Rev.Jacob P.Samuel, Rev.Chandy Jose, Rev.Fr.Goldenly Thomas Oommen, Rev.Stanly, Rev.Roy, Rev.Jayaraj) அனைத்து சபை மக்களும் இக்கூட்டங்களில் கலந்துக்கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டவாதாக.

# MADURAI - RAMNAD CSI DIOCESE - SATTUR CONVENTION







**சாத்தூர்** CSI **சபையில் நடந்த 3 நாள் கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. இரவு கூட்டங்களுக்கு சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், கோவில்பட்டி, அருப்புகோட்டை, மதுரை, ராஜபாளையம் ஆகிய ஊர்களிலிருந்தெல்லாம் ஜாமக்காரன் வாசகர்களும், மற்ற சபை விசுவாசிகளும் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். சனிகிழமை நடந்த ஆலோசனை நேரத்தில் ஜெபிக்கவும், ஆலோசனை பெறவும் காலையிலிருந்து மாலை 4.30மணி வரை ஏராளமான விசுவாசிகள் பங்குபெற்று ஜெபித்து சென்றனர். Rev. Stanly Jayaraj அவர்கள் கூட்டத்தை ஜெப ஆயத்ததுடன் ஏற்பாடு செய்திருந்தார். கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக.**

## நம் தேவனின் சிறப்பு:

1. யகோவாயீரே – நம்மை மீட்க ஒப்புக்கொடுத்தவர் (ஆதி 22:13–14, யோவான் 1:29)
2. யகோவாநிசி – நமக்காக யுத்தத்தை மேற்கொள்ளுகிறவர் (யாத் 17:15–16)
3. யகோவாஷாலோம் – நமக்கு சமாதானத்தை அருளுகிறவர் (நியா 6:23–24)
4. யகோவாரேசி – அவர் கருதுகிறவர், உதவுகிறவர் (யோவான் 10:11, சங் 23:1)
5. யகோவாஷம்மா – கர்த்தர் சகாயம் பண்ணுகிறவர் (எபி 13:5,16; எசேக்கியல் 48:35)
6. யகோவா சிட்கேனு – கர்த்தர் நீதியானவர் (1கொரி 1:30–31, எரேமியா 23:6)
7. யகோவா எல்யோன் – கர்த்தர் உயர்ந்தவர் (அப் 5:31, சங் 7:17, 91:1)
8. யகோவா ஓலாம் – கர்த்தர் பரிசுத்தமாக்குகிறவர் (லேவி 20:8, 21:8, 1பேதுரு 1:15–16)
9. யகோவா செபயோத் – பரிசுத்தராகிய சேனைகளின் கர்த்தர் (எசா 47:4, 48:2, சங் 91:14)
10. யகோவா யெலோகே – கர்த்தர் என் நம்பிக்கையானவர் (சங் 18:20, 7:1)
11. யகோவா யெலோகெகா – கர்த்தர் விடுவிக்கிறவர் (யாத் 20:2)
12. யகோவா எலேகேனு – கர்த்தர் கட்டளையிடுகிறவர் (உபா 1:6, 19, 26)
13. யகோவா ஏரபேக்கா – கர்த்தர் பரிகாரியாயிருக்கிறவர் (யாத் 15:16, மத் 8:16, எசா 53:45)
14. யகோவா ஒசேனு – நம்மை உண்டாக்கின கர்த்தர் (சங் 95:6)

# CNI-யில் CSI

முதன்முதலாக (மும்பை) **பூனாவில்** CNI எல்லையில் CSI ஆலயமும், ஆராதனையும் நடத்தப்படுகிறது.

பூனாவில் இதற்காக CSI ஆலயம் கட்டப்பட சொந்தமான நிலம் விலைக்கு வாங்கப்பட்டு அதன் நில அரசாங்க ரிஜிஸ்டர் பதிவு 2014 ஏப்ரல் மாதம் 11ம் தேதி திருநெல்வேலி டையோசிஸ் பொருளாளர் திரு. செல்வின் ஜெயராஜ் அவர்கள், நெல்லை பிஷப் **Rt.Rev.J.J.கிறிஸ்துதாஸ்** அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட அனுமதி கடிதத்தை சமர்பித்து நெல்லை திருமண்டல CSI Trust பெயரில் **பூனா** பெதஸ்தா **CSI தமிழ்** ஆலயத்துக்காக என்று அரசாங்க பதிவு நடந்து நிலம் கையகப்படுத்தப்பட்டது. இனி ஆலய கட்டுமான பணியை துரிதமாக செயல்படுத்த பூனா பெதஸ்தா CSI ஆலய செயலர் **திரு.ஸ்டீபன்,** பொருளாளர் மற்றும் ஆயர் ஆகியவர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

## PUNE - BETHASTHA CSI TAMIL CHURCH CONVENTION




**பூனாவில்** CSI தமிழ் சபையில் 3 நாட்கள் கன்வென்ஷன் ஏற்பாடுகளை சகோ.**ஸ்டீபன்** மற்றும் ஆயர் யாவரும் இணைந்து கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். பல்வேறு இடங்களிலிருந்து ஜாம்காரன் வாசகர்கள், மற்றும் CNI, மெத்தடிஸ்ட் சபை, UBS வேதாகம கல்லூரியிலிருந்தும் ஏராளமானவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் பங்குகொண்டனர். கூட்டம் ஆசீர்வாதமாக நடந்தேறியது. கேள்வி-பதில் பகுதி மிகச்சிறப்பாக நடைபெற்றதால் சபை மக்களின் பல வேதாகம கேள்விகளுக்கும், குடும்ப விவகாரங்கள் சநம்பந்தமான கேள்விகளுக்கும், பதில் வசன அடிப்படையில் பதில் கிடைத்ததால் யாவரும் மிகவும் சந்தோஷப்பட்டனர். கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது.

**Website: jamakaran.com**
**E-mail : jamakaran@yahoo.com**

# MUMBAI - ANDHERI(EAST)
# HOLY JERUSALEM CNI CHURCH CONVENTION






**பரிசுத்த வாரம்** என்று அழைக்கப்படுகிற நாட்களில் இக்கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக நடந்தது. **Rev. John Thavakumar** அவர்கள் தலைமையில் சபை செயலர். திரு. **தனசிங்மோசஸ்** அவர்களின் சிறந்த ஏற்பாடுகளால் கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தன.

இதே நாட்களில் ஒவ்வொரு சபைகளிலும் விசேஷ தியான கூட்டங்கள் **மும்பை** எங்கும் நடைபெற்றதால் பல்வேறு இடங்களிலிருந்தும், பல சபைகளிலிருந்தும் மக்கள் இக்கூட்டங்களில் பங்குபெற இயவில்லை என்று துக்கத்தோடு அறிவித்தனர். என்றாலும் சபை மக்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக.

# KANYAKUMARI CSI DIOCESE -
# PUTHALAM CONVENTION





**கன்னியாகுமரி** மாவட்டத்தில் **புத்தளம்** என்ற இடத்தில் உள்ள CSI சபையினர் நடத்தின ஆவிக்குரிய கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தது. **Rev.Robi Gnanadhas** அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை ஜெபஆயத்தத்துடன் செய்திருந்தார். ஆண்டவர் நாமம் மகிமைப்பட்டது. மிஷனரி **ரீங்கில் தொபே** ஆரம்பித்த முக்கிய சபைகளில் **புத்தளம்** சபையும் ஒன்று என்பதை நினைக்கும்போது பெருமையாக இருந்தது.

# பெதஸ்தா ஜெபக்குழுவின் ஒருநாள் உபவாச ஜெபகூடுகை

# பேர்னாம்பட்டு (வேலூர்)





**வேலூர் மாவட்டத்தில் பேரணாம்பட்டு என்ற இடத்தில் உள்ள அனைத்து சபையை சேர்ந்த பெதஸ்தா ஜெபகுழுவினர் நடத்தின ஒருநாள் உபவாச கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தது. சகோ.தயாளன் அவர்களும் ஜெபகுழுவினரும் கூட்ட ஏற்பாடுகளை ஜெபஆயத்ததுடன் செய்திருந்தார்கள். ஆண்டவர் நாமம் மகிமைப்பட்டது.**


Attapadi calling ... committed christian teachers

Are you a born again committed Christian teachers

Are you looking for an opportunity to serve the Lord through your noble profession? Then, here is your golden opportinity.

**Bethany English Medium High School, Attappadi (Government recognized, English medium, Co-educational)**
and managed by Tribal mission needs teachers to teach children predominarntly from the socially, culturally and economically challenged Tribal community.

Tribal mission aims at carving out morally upright , responsible future citizens capable of meeting challenges their society faces and up lift it from decades of backwardness.

Even if your are able to commit only one year of service, you are welcome.
Adequately qualified persons with or without teaching experience may apply at earliest to :

**Dr. K.Muralidar, Director, Bethany English Medium School, Vettalakki, Attapadi. Palakkad dt. Kerala - 689 548**

DECENT SALARY / HOMELY FOOD AND ACCOMMODATION ARE AVAILABLE ATTAPADI

**Tel : 09443165080(mobile) 0422 2657026**
**E.mail.: muralidar.anaikatty@gmil.com**

**செய்திகள்! செய்திகள்!!**

# கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் ஜாக்கிறதை!!

**இந்தியாவில் இயங்கும் அனைத்து மிஷனரி ஸ்தாபனங்களைப்பற்றியும் சுவிசேஷம் அறிவிக்கும்** மற்ற ஊழிய ஸ்தாபனங்களைப்பற்றியும் RSS,BJP இயக்கங்கள் அனைத்து புள்ளிவிவரங்களையெல்லாம் பல வருடங்களுக்கு முன்பே தொகுத்து வைத்துள்ளன. மிஷனரி இயக்கங்களின் தலைவர்களைப்பற்றியும், பொறுப்பில் உள்ளவர்களைப்பற்றியெல்லாம் குறிப்பு எழுதி வைத்துள்ள RSS இயக்கங்களின் சுற்றிக்கையை நான் பார்க்க நேர்ந்தது.

ஆகவே எல்லா மிஷனரி ஸ்தாபனங்களும் அவர்களின் பணவரவு,செலவு,Income Tax விவரம் ஆகியவைகளில் அரசாங்கம் குற்றம் கண்டுபிடிக்காதவகையில் எச்சரிக்கையுடன் இருக்ககேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக, **வெளிநாட்டு பணம்** பெறும் ஸ்தாபனங்கள்மீது முதல் நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவர தொடங்கியுள்ளது.

மிஷனரி ஸ்தாபனத்தின் **குறைபாடுகள்** குறித்து மறைமுகமாக சில மிஷனரிகளே அரசாங்கத்துக்கு புகார் அறிவிக்கும் வெறுப்பின் நிலை உருவாகியுள்ளது. அப்படிப்பட்ட குற்றசாட்டுகளில் **விஷ்வவாணி** போன்ற வேறு சில ஸ்தாபனங்களின் பெயர்களும் குற்றச்சாட்டு பட்டியலில் இடம் பெற்றுள்ளது. ஓய்வுபெற்ற மிஷனரிகளின் **பி.எப்**(P.F) பணம் பல வருடங்களாக அவர்களுக்கு கொடுக்காமல் இருப்பதால் பல மிஷனரிகள் வேதனையோடு அதை அறிவிப்பது நல்ல மிஷனரி ஸ்தபனத்துக்கு கெட்ட பெயரை உண்டாக்கவிடும்.

கஷ்டப்பட்டு காடுகளில் ஊழியம் செய்த மிஷனரிகள் தங்கள் ஓய்வுநாட்களில் நிம்மதியாக பணகஷ்டமின்றி அவர்களை வாழவைக்கவேண்டியது ஒவ்வொரு **மிஷனரி ஸ்தாபனத்தின்** கடமையாகும். இப்போதுள்ள புது அரசாங்கம் நம்மை வெறுப்புடன் பார்ப்பதை உணரவேண்டும். மிஷனரிகளில் யாராவது தாங்கள் ஏமாற்றப்படுவதை **பிஎப்** அலுவலகத்துக்கோ, அல்லது அரசு அதிகாரிகளுக்கோ புகார் அனுப்பினால், அந்த ஸ்தாபன தலைவர்கள்,பொருப்பாளர்கள், அலுவலக பொருப்பாளர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஒரு குறிப்பிட்ட ஸ்தாபன டைரக்டர் ஊழியர்களின் **பிஎப்** பணத்தை சில வருடங்களாக **வங்கியில்** சேர்க்காத குற்றத்துக்காக **ஜெயிலிலும்** அடைக்கப்பட்டார். ஜாக்கிறதை!. ஊழிய ஸ்தாபனங்களில் இதுபோன்ற குற்றச்சாட்டு எழாமல் பார்த்துக்கொள்ளவது நல்லது.

**பெந்தேகோஸ்தே சபைகளுக்கு RSS இயக்கத்தால் பிரச்சனைகள் இல்லை:**
காரணம், இவர்கள் யாரும் மிஷனரி ஊழியங்களில் சுவிசேஷம் அறிவிக்கும் பாரம் இல்லாதவர்கள். அழிந்துப்போகும் ஆத்துமாக்கள் காடுகளில், கிராமங்களில் வடஇந்தியா பகுதிகளில் எத்தனை கோடி மக்கள் இயேசுவைப்பற்றி அறியாது தினம்தினம் மரிக்கிறார்கள்!. ஒருமுறைக்கூட இயேசுவைப்பற்றி கேட்டிராத இப்படிப்பட்ட மக்களைக்குறித்து பாரமில்லாமல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து வாராவாரம் விதவிதமான பிரசங்கம் கேட்டு என்ன பயன்?. கிறிஸ்தவர்களை மீண்டும்மீண்டும் கிறிஸ்தவர்களாக மாற்றும் இவர்களின் ஊழியத்தில் தேவன் பிரியப்படுவாரா? இப்படிப்பட்ட சபைளைக்குறித்து இந்துமத தீவிரவாதிகளுக்கு பிரச்சனையே இல்லை. அதனால்தான் பெந்தேகோஸ்தே சபைகளிலிருந்து இரத்தசாட்சியாக மரிக்க ஆட்களேயில்லை.

சபை மிஷனரி பாரம் இல்லாதுபோனாலும் சபையில் உள்ள மக்கள் மிஷனரிகளாக எழும்ப வேண்டும். அவரவர் ஆத்துமாவுக்கு அவரவர்கள்தான் கர்த்தரிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். சபை எங்களை மிஷனரி பணிக்கு உற்சாகப்படுத்துவதில்லை என்று நியாய தீர்ப்பில் கூறி தப்பிக்க இயலாது. ஜாக்கிறதை!. நீங்கள் மனம்திரும்பி இரட்சிக்கப்பட்டது சரியாக இருக்குமானால் நிச்சயம் அழிந்துபோகிற ஆத்துமாக்களைக்குறித்தும் இயேசுவை ஒருமுறைகூட கேட்டிராத மக்களைக்குறித்தும் பாரமும் ஜெபத்தில் அந்த ஆத்துமாக்களுக்காக கண்ணீரும் வரும். கர்த்தர் ஒவ்வொருவரிடமும் கணக்கு கேட்பார்! மறக்கவேண்டாம்.

செய்திகள்! செய்திகள்!!



## ஆந்திரா மாநிலம் இரண்டாக பிரிந்தது:

60 ஆண்டு போராட்டத்துக்குபிறகு கடந்த காங்கிரஸ் ஆட்சி ஆந்திராவை **தெலுங்கானா** என்றும், **சீமாந்திரா** என்றும் இரண்டு மாநிலமாக பிரித்துவிட்டது. 3.6.2014 அன்று தனி தெலுங்கானவின் முதலமைச்சராக திரு.கே.சந்திரசேகரராவ் அவர்கள் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இரண்டு மாநிலத்துக்கும் தற்காலிகமாக 10 வருடங்களுக்கு **ஹைதராபாத்** நகரம் தலைநகரமாக அமையும்.

**தெலுங்கானா மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்கள்:** அடிலாபாத், நிஷாமாபாத், கரீம் நகர், மெடாக், வாராங்கல்,ரங்காரெட்டி, கம்மம்,நல்கொண்டா, மெகபுப் நகர், ஐதராபாத் ஆகும்.

**சீமாந்திர மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்கள்:** சித்துார், நெல்லுார், கடப்பா, அனந்தபூர், கர்நூல், ஓங்கோல், குண்டூர், கிருஷ்ணா, யானம்(பாண்டிசேரி),காக்கிநாடா, கிழக்கு கோதாவரி, விசாகப்பட்டிணம், விஜய நகரம், படுகாகுளம் ஆகும்.

இப்போது இந்தியாவில் புதிய தெலுங்கானாவுடன் சேர்த்து மொத்தம் 29ம் மாநிலமாக அமைந்துள்ளது.

## கவனிக்கவும்

**1.** **குறைவான** Stamp **ஒட்டி அனுப்பும் பத்திரிக்கைகளை, கடிதங்களை, கவர்களை ஒரு சிலவற்றை மட்டும் திருப்பி அனுப்புகிறோம். காரணம் அனுப்புபவர்கள் அந்த தவறை சரிசெய்து கொண்டு கடிதத்தின் சரியான எடைக்கு ஏற்ப ஸ்டாம்ப் ஒட்டிஅனுப்ப அதுஅவர்களுக்கு உதவும். இப்படி எழுதுவது உங்களை வேதனைப்படுத்தினால் பொருத்துக்கொள்ளவும். கவர் அனுப்புபவர்கள்** Stamp **ஒட்டி அனுப்பும்போது சரியான எடை பார்த்து, அதற்குறிய** Stamp **ஒட்டி அனுப்பவும்.**

**2.** Book Post **என** Rs.4 **தபால்தலை ஒட்டும்போது திருமண அழைப்பிதழ்களில், கையெழுத்து இட்டோ அல்லது பேனாவில் எதையாவது எழுதினாலோ** Due **அல்லது அபராதம் (**Fine) **இடுவதால் தபால் அனுப்புபவர் எச்சரிக்கையாக அனுப்பவும்.**

**3. எங்களுடைய ஜாமக்காரன் உங்களுக்கு அல்லது அனுப்பப்படும்போது உங்களுக்கு அனுப்பும் எங்கள் கடிதங்கள் ஏதாவது காரணத்தால் தபால்துறையிலிருந்து** due(fine)**வசூலிக்கப்படும்போது அதை** Refused **என்று எழுதி தயவுசெய்து எங்களுக்கே திருப்பி அனுப்பவும். நாங்களும் எங்களை சரி செய்ய அது உதவியாக இருக்கும்.**

**4. பேங்க் வழியாக,** Emo-**மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் தயவுசெய்து இ-மெயில் மூலமாகவோ, தொலைப்பேசி மூலமாகவோ, கடிதம்மூலமாகவோ, பேக்ஸ்மூலமாகவோ நீங்கள் காணிக்கை அனுப்பிய தேதி-தொகை-எந்த பேங்க் என்ற விவரத்தை எங்களுக்கு தெரிவித்தால் நல்லது. பேங்க் பாஸ்புக்கில் எங்கிருந்து அந்த தொகை வந்தது!, யார் அனுப்பியது! போன்ற விவரங்களை பேங்க் பாஸ்புக்மூலம் அறிய முடிகிறதில்லை. ஆகவே நீங்கள் காணிக்கையை பேங்க்மூலமாக என் அக்கவுண்டுக்கு அனுப்பிய உடனே எங்களுக்கு தெரிவித்துவிடுங்கள். இவ்விஷயத்தில் ஒத்துழைப்பு தந்தால் அரசாங்கத்துக்கு கணக்கு காட்டும்போது அவர்கள் எங்களை குற்றம் சாட்ட முடியாதபடியிருக்க உங்கள் அறிவிப்பு உதவியாக அமையும்.**



## நம் இந்திய தேசத்தின் புதிய பிரதமரை வாழ்த்துகிறோம், ஜெபிக்கிறோம்:

' எல்லாராலும் எதிர்ப்பார்த்த, உலக நாடுகளும் எதிர்ப்பார்த்த நம் இந்திய தேசத்தின்புதிய பிரதமர் திரு.மோடி அவர்களை வாழ்த்துகிறோம். குறிப்பாக 30 ஆண்டுகளுக்குபிறகு அரிதி பெரும்பான்மை வாக்குகளோடு, கூட்டணி கட்சிகளின் தயவு இல்லாமல் தன் சொந்த கட்சிகளின் பெருத்த மெஜரிட்டியுடன் இந்திய பிரதமராக ஆட்சிபீடம் ஏறிய திரு.மோடிஅவர்கள் தான்சார்ந்த கட்சியான BJP பெயரால் ஜெயிக்காமல் மோடி என்ற தனி நபர்மேல் இந்தியமக்கள் வைத்த நம்பிக்கையால் பெற்ற மிகப்பெரிய வெற்றியேயிது.

' புதிய பிரதமர்.Thiru.Narendra Damodardas Modi அவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துகிறோம். அவரின் நல்லாட்சிக்காக ஜெபிக்கிறோம். பிரதமர்.மோடி அவர்களுக்காகவும், அவர் சார்ந்த கட்சியான BJPயில் உள்ள அனைவருக்காகவும் இயேசுகிறிஸ்து இரத்தத்தை சிந்தியுள்ளார். இயேசுகிறிஸ்து அவர்களையும் நேசிக்கிறார். ஆகவே இயேசுகிறிஸ்துவிடம் நாம் அனைவரும் இந்தியாவின் நல்லாட்சிக்காகவும், பிரதமருக்காகவும் அவரின் BJP கட்சியினருக்காகவும் ஜெபிப்போம்.

- ஜாமக்காரன்

**JUNE 2014**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at Priya Pathipagam,197.LIC Colony, Salem-636 004
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.